வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 14.12.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 09 | பக்கங்கள் : 16




# ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிளிநொச்சியில் கடும் எதிர்ப்பு!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் அமர்வு புறக்கணிப்பு

கிளிநொச்சி, டிசெம்பர் 14

மனித உரிமைகள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயல்பாடுகளில் திருப்தியில்லை என்று தெரிவித்து நேற்றைய அமர்வை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் புறக்கணித்தனர்.

15



## தமிழ் மக்களின் அரசியல் தொடர்பில் சாணக்கியர்களுக்கு தெளிவு வேண்டும்



**சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து**

யாழ்ப்பாணம், டிசெ. 15

“இலங்கை அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம் குறித்து தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் பட்டம் வழங்கிக்கொள்பவர்கள் அதற்கு முன்னுக்குப் பின் முரணான கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். அவர்களுக்கு தமிழர்களின் இன்றைய யதார்த்த நிலை புரியவேண்டுமென்பதுடன், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல்

15

## ஜனாதிபதியின் செயலர் பதவியிலும் மாற்றம்?

கொழும்பு, டிசெ. 14

ஜனாதிபதி செயலாளர் பதவியிலிருந்து பி. பி. ஜயசுந்தரவை நீக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுப்பதற்கு அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்த்

15

## ஒமைக்ரோன் பாதிப்பால் முதல் மரணம் பதிவானது

லண்டன், டிசெ. 14

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸின் ஒமைக்ரோன் திரிபு பாதிப்பால் முதல் மரணம் பதிவாகியுள்ளது.

இங்கிலாந்தில் இந்த மரணம் பதிவாகியுள்ளது. உலகில் ஒமைக்ரோன் தொற்றால் பதிவான முதல் மரணம் இதுவே

15

## சீனத் தூதுவர் சென்ஹொங் நாளை வடக்குக்கு வருகிறார்

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கான சீனாவின் தூதுவர் கீ சென் ஹொங் இரு நாள் பயணமாக நாளை புதன்கிழமை வடக்குக்கு வருகிறார்.

இந்தத் தகவலை சீனத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் பயணத்

15



## 4ஆவது டோஸும் வழங்க நேரிடலாம்!

**சுகாதார பிரதி பணிப்பாளர்**

கொழும்பு, டிசெ. 14

எதிர்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில் நான்காவது டோஸும் வழங்க நேரலாம். இதனால், கோவிட்-19 தடுப்பூசி அட்டைகளை பாதுகாப்பாக

15

## 60 கர்ப்பவதிகள், 89 சிறுவர்கள் 3ஆவது அலையில் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 14

கொரோனா தொற்றின் மூன்றாவது அலையில் மட்டும் 60 கர்ப்பவதி தாய்மாரும், 89 சிறுவர்களும் உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சின் தாய் மற்றும் சிறுவர் சுகாதார பணிப்பாளர், மருத்துவர் சித்ரமாலி டி

15

## 3 பிள்ளைகளின் தாயார் தொற்றால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு உள்ளான 3 பிள்ளைகளின் தாயார் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - அராலி வீதி, வசந்தபுரத்தைச் சேர்ந்த கண்ணன் பத்மலோஜினி

15

## கொரோனா தொற்றால் மேலும் 27 பேர் மரணம்!

கொழும்பு, டிசெ. 14

நாட்டில் மேலும் 27 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தனர்.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த இவ்வாறு உயிரிழந்தவர்களில் 14 ஆண்களும், 13 பெண்களும் அடங்குகின்றனர்.

15

## ‘பூஸ்டர் டோஸ்’ பெற்றவர் சிலமணிநேரத்தில் மரணம்!

வவுனியா, டிசெ. 14

கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை பெற்றவர் சில மணி நேரங்களிலேயே மரணமானார். எனினும், இவரின் மரணத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

15

## 12 வயது சிறுவர்களுக்கும் தடுப்பூசி வழங்க அனுமதி!

கொழும்பு, டிசெ. 14

12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்க சுகாதார அமைச்சு அனுமதி அளித்துள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

15



# இப்படியும் நடக்கிறது...!

நேற்று முன்தினம் 'ஈழநாடு'வில் நண்பர் மாலி எழுதிய 'மோடியின் அழைப்பும் வெற்றியின் நகர்வும்' என்ற தலைப்பிலான கட்டுரையை படித்ததும், அவரை யாரோ தவறாக ஊகிக்க வைத்துவிட்டனரோ என்று எண்ணத் தோன்றியது.

கூட்டமைப்பினரின் இந்திய விஜயத்தை சம்பந்தன் ஒத்தி வைத்தது குறித்த அவரின் பார்வையில், இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்.

'பிரச்னைகளில் காலத்தைக் கடத்தினால் பிரச்னைகள் தாமாகவே தீர்ந்துபோகும்' - ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில், அவர் பின்பற்றிய - அவரின் அறிவுரையான ஒரு கொள்கை இது. இலங்கையில் இனப் பிரச்னையின் ஆரம்பம் தொடக்கமே ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அதனுடன் முக்கியமான ஒருவராக தொடர்ந்தவர். ஆக, இது சிங்கள இராஜதந்திர கொள்கை ஒன்றாகவே இருந்துவருகிறது.

இவ்வாறு குறிப்பிடும் மாலி, பின்னர்,

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொண்டுவர விருப்பதாக கூறும் புதிய அரசியலமைப்புக்கு சில பிரேரணைகளை கையளித்துவிட்டு காத்திருக்கிறார் சம்பந்தன். இந்நிலையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை நோக்கியதாக அமையவல்ல இந்திய பிரதமருடனான சந்திப்பு, அதைவிட அதிகமானதாக இருக்கக்கூடிய தனது கோரிக்கையில் தடங்கலை அல்லது பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்ற எண்ணமும் - அது நியாயப்படுத்த இயலாததெனினும் - சம்பந்தனுக்கு இருந்திருக்கக் கூடும்.

ஆக, கோட்டாபய அரசின் புதிய அரசியலமைப்பு சம்பந்தனின் கோரிக்கைகளை உள்ளடக்குகிறதோ இல்லையோ, 'சம்பந்தன் பிரேரணை' என்று கூறுமளவிலாவது அது இலங்கை அரசியலின் வரலாற்று பட்டியலில் இடம் பெறவேண்டும் என்பது சம்பந்தனின் மேலான அவா. இது, அரசியல் வட்டாரங்களில் நம்பப்படும் ஒரு யூகம். - இப்படிச் செல்கிறது மாலியின் கட்டுரை.

சம்பந்தனுக்கு இப்படியோர் அவா இருக்கிறதோ என்னவோ மாலிக்கு இருக்கிறது போலும். ஊகம் என்பது எவருக்கும் எப்படியும் வரலாம். அதில் தவறே இல்லை.

மற்றுமொரு மூத்த ஊடகர் பனங்காட்டானுக்கும் ஓர் ஊகம் இருக்கிறது.

"இப்போது ராஜபக்ஷக்களை பகைக்க விரும்பாது - அவர்கள் வழங்கிய இலவச பங்களாவை இழக்க விரும்பாது இந்தியப் பயணத்தை முடக்க விரும்புகிறாரா?", என்று பனங்காட்டான் கேட்பது அவரின் ஊகம்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் சில வாரங்களுக்கு முன்னர் ரெலோ ஏற்பாட்டில் தமிழ்பேசும் கட்சிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றிருந்தது. அந்தக் கூட்டம் என்னவோ பல விடயங்களைப் பற்றி பேசியிருந்தாலும் பதின்மூன்றை முன்னிலைப்படுத்தியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் இந்தியத் தூதுவர், சம்பந்தனின் வீட்டுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். சில நிமிடங்கள் அங்கு பல விடயங்களையும் பேசிய அவர், புறப்படத் தயாரான போதுதான், ரெலோ கூட்டம் பற்றியும் அதில் சம்பந்தன் கலந்துகொள்கிறாரா என்பது பற்றியும் கேட்டிருக்கிறார்.

என்ன காரணத்திற்காக திடீரென அன்று வந்தார் என்பதையே சம்பந்தனுக்குப் புரியாமல் இருந்தபோதுதான், கடைசியாக அவர் இதனைக் கேட்பற்காகத்தான் வந்தாரோ என்ற சந்தேகம் ஏற்படலாயிற்று. அப்போது, அவர் சொன்னதைத்தான் மாலி தனது ஊகமாகத் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கம் ஓர் அரசியலமைப்பை தயாரிக்கப்போவதாகக் கூறுகின்றது. அதற்கு நாங்களும் யோசனைகளைச் சமர்ப்பித்திருக்கிறோம். இந்த வேளையில் பதின்மூன்றை வலியுறுத்தி ஒரு பொதுமேடைக்கு செல்வது நல்லதல்ல. 13ஐ வலியுறுத்தச் சொல்லி இந்தியாவை கேட்பதற்கு நாங்கள் பொது மேடைக்கு செல்லவேண்டியதில்லையே. நேரடியாகவே உங்கள் மூலம் இந்திய அரசுக்கு எமது கோரிக்கையை விடுக்கலாம்தானே? - இவ்வாறுதான் சம்பந்தன் அன்று இந்தியத் தூதுவரிடம் தெரிவித்திருந்தார்.

மாலி ஊகிப்பதுபோல தனது யோசனைகள் புதிய அரசியலமைப்பில் இடம்பெறாவிட்டாலும், 'சம்பந்தன் பிரேரணை' என்று கூறுமளவிலாவது அது இலங்கை அரசியல் வரலாற்று பட்டியலில் இடம்பெறவேண்டும் என்பது சம்பந்தனின் மேலான அவாவாக இருந்திருந்தால், முதலில் அந்த பிரேரணையை தமிழ் மக்கள் மத்தியில் வைத்து அதற்கு முழு தமிழர்களின் ஆதரவையும் அல்லவா பெற்றிருக்கவேண்டும்.

அதைவிட இந்த யோசனைகளையே இந்தியாவுக்கு எடுத்துச் சென்று பதின்மூன்று அல்ல, இதுதான் எமது பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வைத்தரும் என்று அந்த பிரேரணையை "மார்க்கெற்" பண்ணுவதற்கல்லவா முயன்றிருக்கவேண்டும்.

அவ்வாறு அவர் செய்திருந்தால் அது திம்பு யோசனைகள் போல வரலாற்றில் இடம்பெற்றிருக்கும்.

அதனை அவர் செய்ய முயற்சி எடுக்காதவரை பனங்காட்டானின் ஊகமே நமக்கும், ஏன் எல்லோருக்குமே ஏற்படும்.

அல்லது மாலியே சொல்வதுபோல 'பிரச்னைகளில் காலத்தைக் கடத்தினால் பிரச்னைகள் தாமாகவே தீர்ந்துபோகும்' என்ற தென்னிலங்கையின் இராஜதந்திரத்திற்கு உதவுவதாகவும் இதனை எடுக்கவேண்டி வரும்.

- ஊர்க்குருவி



## ஹெரோயினுடன் ஒருவர் கைது!

சாவகச்சேரி, டிசெ. 14

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த ஒருவரை தாம் கைது செய்துள்ளனரென சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் கல்லுண்டாய் வெளியூடாக ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்படுவதாக அவர்களுக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, உதவி மதுவரி ஆணையாளர் தர்மசீலன் மற்றும் மதுவரி அத்தியட்சகர் தங்கராசா ஆகியோரின் வழிநடத்தலில் சாவகச்சேரி மதுவரி நிலைய பொறுப்பதிகாரி ராஜ்மோகன் தலைமையிலான குழுவினர் அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நவாலி பகுதியைச் சேர்ந்த 36 வயது நபர் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடம் 18. 670 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்க்கப்பட்டது. இதையடுத்து அந்த நபர் கைது செய்யப்பட்டார். (ஐ-2)

## கொக்கிளாயில் பொலிஸ் நிலையம்

முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு - கொக்கிளாயில் இயங்கிவந்த கொக்கிளாய் பொலிஸ் காவலரண் நேற்று முதல் பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டது. பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடம் நேற்று வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரால் ஜெகத் பளிகக்காரவால் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று மு. ப. 10 மணியவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச பொறுப்பதிகாரி டபிள்யூ. பி. எம். ஏ. அமரசிங்க தலைமையில் நடைபெற்றது. (ஐ)

## வாள்வெட்டுக் குழுவினர் சங்கானையில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த வாள் வெட்டுக் குழு அங்கு அட்டகாசம் செய்துள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குறித்த குழு வீட்டின் கதவுகள், ஓட்டோ, மீன் தொட்டி, தண்ணீர்க் குழாய், கதிரைகள் மற்றும் வேலித் தகரங்கள் என்பவற்றை வாளினால் வெட்டி சேதப்படுத்தியுள்ளது.

அந்தக் கும்பல் ஓட்டோவுக்கு தீ மூட்டியுள்ளது. ஓட்டோ மூடியிருந்த பொலித்தீன் எரிந்துகொண்டிருந்தவேளை வீட்டிலிருந்தவர்கள் அந்த பொலித்தீனை கீழே இழுத்து விழுத்தினர். இதனால் ஓட்டோ பாரிய பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## கல்வி tv CHANNEL-1

**14.12.2021 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## கல்வி tv CHANNEL - 2

**14.12.2021 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
14.12.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

# மூன்றாம் தரப்பு?

ராஜபக்ஷ அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்றது. தமிழர் தலைமைகள் அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றன. இலங்கை சுதந்திரமடைந்ததற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட இரண்டு அரசியல் யாப்பு உருவாக்கங்களிலும், தமிழ் மக்களின் பங்கு பற்றல் இருந்திருக்கவில்லை. தமிழ் தலைமைகளின் கடுமையான ஆட்சேபனைகளுக்கு மத்தியில்தான் குறிப்பிட்ட யாப்புக்கள் பெரும்பான்மை மேலாதிக்கத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாகவே தேசிய இனப்பிரச்னை வளர்ந்து சென்றது. ஆனால், இது பற்றி சிங்கள தலைவர்கள் எப்போதுமே கவலைப்பட்டதாகவோ - அல்லது, தங்களை திருத்திக் கொண்டதாகவோ இதுவரையில் வரலாறில்லை.

சிங்கள ஆட்சியாளர்களின் எண்ணத்திலிருக்கும் பிரச்னைக்கான தீர்வு சுலபமானது - அதாவது, பிரச்னைகளை முன்வைக்கும் தமிழர்களை மேலும், பலவீனப்படுத்துவதன் மூலம், பிரச்னையை இல்லாமலாக்கலாம். இலங்கை சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் காலத்திலிருந்து - இதுதான் நடந்து வந்திருக்கின்றது. ஒருபுறம் தமிழர்கள் தங்களின் உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருந்தபோது - அந்த போராட்டத்தின் நியாயப்பாடுகளை புரிந்து கொண்டு, நியாயமான அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் முயற்சித்ததில்லை. இந்த பின்புலத்தில்தான் தமிழர் பிரச்னையில் மூன்றாம் தரப்பின் தலையீடுகள் தவிர்க்க முடியாத இடத்தைப் பெறுகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் உறுதிப்படுத்தப்படவில்லை - அதற்கு மாறாக மக்கள் ஒடுக்கப்படுகின்றனர் - கொல்லப்படுகின்றனர்- இதனை அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில், இதன் தாக்கம் தங்களுடைய தேசிய பாதுகாப்பிற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என்னும் அடிப்படையில்தான், இந்தியாவின் தலையீடு இடம்பெற்றது. இந்தியாவின் நேரடியான தலையீடு தொடர்பில் புதுடில்லி மட்டத்திலேயே மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்தன. அதாவது, ஒரு நட்பு நாட்டின்மீது இவ்வாறானதோர் இராணுவ ரீதியான தலையீட்டை செய்யக்கூடாது - அது இந்தியாவின் அயலுறவில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்னுமடிப்படையில் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், புதுடில்லியிடமிருந்த அபிப்பிராயம் வேறு - அதாவது, இலங்கையின்மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்காது விட்டால், ஜெயவர்த்தனவை வழிக்கு கொண்டுவர முடியாது. இந்த அடிப்படையில்தான், தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்து, நிதியளித்தது. இதன் மூலம் இலங்கை அரசுக்கு பல முனைகளிலும் நெருக்கடிகளை கொடுத்தது. இதன் விளைவாக வந்ததுதான் மாகாண சபை தீர்வு.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் முதலாவது மூன்றாம் தரப்பின் தலையீடு முற்றுப்பெற்றுவிட்டது. அதன் பின்னர் இடம்பெற்ற மூன்றாம் தரப்பின் தலையீடுதான், நோர்வே தலைமையில் இடம்பெற்ற ஒஸ்லோ பேச்சு. இது வெளித்தோறத்தில் நோர்வே போன்று தெரிந்தாலும்கூட, இது அடிப்படையில் ஒரு மேற்குலகின் சமரசத் தலையீடாகும். ஆனால், இந்த மூன்றாம் தரப்பின் தலையீடு வெற்றிபெறவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழர் பிரச்னையில் இரண்டு தடவைகள் மூன்றாம் தரப்பின் தலையீடுகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால், இதில் வெற்றி பெற்ற மூன்றாம் தரப்பின் தலையீடு என்றால், அது இந்தியாவின் தலையீடு மட்டும்தான்.

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு தீர்வு முயற்சியும் வெற்றிபெறவில்லை. இந்த வரலாற்று அனுபவம், மூன்றாம் தரப்பு தொடர்பில் ஒரு தெளிவான படிப்பினையை ஈழத் தமிழர்களுக்கு வழங்கியிருக்கின்றது. இதில், கவனிக்க வேண்டிய பிறிதொரு முக்கியமான விடயமும் உண்டு. அதாவது, மூன்றாம் தரப்பின் எந்தவோர் ஈடுபாடும் இல்லாமல் - உள்ளுக்குள் தீர்க்கலாம் என்னும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களும் வெற்றியளிக்கவில்லை. இதில் இறுதியாக கிடைத்த தோல்வி அனுபவம் ரணில் - மைத்திரி அரசாங்கத்தின் கீழ், கூட்டமைப்பும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட புதிய அரசியல் யாப்பு முயற்சியாகும். இந்த பின்புலத்தில்தான் இந்தியாவிற்கு கோரிக்கையொன்றை முன்வைக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.




# இந்தியாவிடம் மீண்டும் சரண்!

-அலசுவது இராஜதந்திரி-

அதிகாரப் பகிர்வை வலியுறுத்த இந்தியாவின் தயவை நாடுவதற்கு தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன. நேற்று முன்தினம் கொழும்பில் தமிழ் பேசும் கட்சிகள் சந்தித்தபோதே இந்தியாவின் தயவை அதிகாரப் பரவல் குறித்து நாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் தீர்வே ஏற்புடையதென்பதை இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆயினும், இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த தென்னிலங்கைக் கட்சிகள் வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யத் தவறி வந்ததோடு மூன்று தசாப்த கால கொடிய யுத்தத்துக்கும் வழியமைத்திருந்தன.

தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள் வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யத் தவறியமை ஒருபுறமிருக்க வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளிடையே நிலவிய ஒற்றுமையின்மைகூட தமிழர் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் இடையூறுகளைப் பெரிதும் ஏற்படுத்தியிருந்தன.

இதன்காரணமாக 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது' போலவே தமிழ் அரசியல் தரப்பும் அரசியல் குறிக்கோள்களை அடைய முடியாது இருந்தது. இதேவேளை கிடைத்த சந்தர்ப்பங்களைக்கூட தவறவிட்டதும் வரலாறாகவே இருக்கின்றது.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசியல் அமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டத்தை அறிமுகப்படுத்தி வடக்கு - கிழக்கில் அதிகாரப் பரவலாக்கத்தை இந்தியாவின் பின்புலத்துடன் அமுலாக்குவதற்கு நிறையவே சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. ஆனால், 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்க மறுத்ததோடு வடக்கு - கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வெற்றிகரமாக அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ள வந்திருந்த இந்திய அமைதிப் படையினரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் விரட்டியடித்திருந்தனர்.

இந்நிலையில், தற்போது மீளவும் இந்தியாவின் தயவை அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ள வேண்டுவதென தமிழ் பேசும் கட்சிகள் என்ற ஓரணியில் முஸ்லிம் கட்சிகளும் முன்வந்துள்ளன.

வடக்கு - கிழக்கில் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் 13ஆவது திருத்தச்சட்டம் அறிமுகமானபோது இருந்த வடக்கு - கிழக்கின் அரசியல் கட்சிகளைவிட தற்போது மேலும் கூடுதல் கட்சிகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இருந்தபோதிலும் தம்மிடையே ஒற்றுமை பேண தவறியிருந்த வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் தற்போது ஒரே குரலில் அதிகாரப் பரவலாக்கத்தை வேண்டி இந்தியாவின் தயவை நாட முன்வந்திருப்பது வரவேற்புக்குரியதாகவே இருக்கின்றது.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதற்கமைய இந்த ஒற்றுமையான போக்கு நீடித்து நிலைக்குமேயானால் இந்தியாவின் தயவை நாடுவது ஒருபுறமிருக்க வடக்கு - கிழக்கின் சிறுபான்மையின கட்சிகள் மட்டுமல்ல. தென்னிலங்கையின் மலையகத்தைச் சேர்ந்த சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள்கூட தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்றே கருத முடியும்.

அண்மையில் இந்தியாவின் வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா கொழும்பு வந்திருந்தார். அப்போது தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியாவின் தயவை நாடும் முன்னர் தம்மிடையே ஒற்றுமை பேண வேண்டுமெனக் கேட்டிருந்தார்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முதுமையின் உச்சத்தில் இருக்கின்ற தருணத்தில் அவரின் நீண்டகால அரசியல் அனுபவத்தையும் உள்வாங்கிய நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள் குறிப்பாக, முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி. சி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் புதிய ஒருங்கிணைப்பில் சேர்ந்துள்ளமை வரவேற்புக்குரியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில், இப்புதிய ஒற்றுமை எவ்வளவு தூரம் இந்தியாவை இலங்கையின் வடக்கு - கிழக்கில் அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ள வைப்பதில் வெற்றிபெறும் என்பது பிரதான கேள்வியாக இருக்கின்றது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் நேர்மையான முறையில் வடக்கு - கிழக்கில் அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கியத்துவத்தை உணராத வரை இந்தியாவின் தலையீட்டை வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் தரப்புகள் கோருவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். அதேசமயம் இந்தியாவும் இலங்கையில் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்துக்கு முன்பை விட தற்போது கூடுதல் அழுத்தத்தை வழங்க வேண்டியதும் இன்றியமையாததாகின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

இழுபறியாக நின்ற விஷயங்கள் இன்று நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். எதிர்பார்த்த பணம் வரும். சற்றுக் கூடுதலாக உழைத்தால் அற்புதப் பலன் உண்டு.

**இடபம்**

கடன்களைக் குறைப்பீர்கள். உற்சாகமாகப் பணி புரிவீர்கள். பணியிடத்தில் உங்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் அனைத்தும் தீரும்

**மிதுனம்**

நினைத்ததை செய்து முடிப்பதில் உறுதியாக இருப்பீர்கள். இழுபறியாக இருந்த பிரச்னைகள் இன்று சாதகமாக முடியும். விடாமுயற்சி காரணமாக சாதகமான பலன்களை பெறுவீர்கள்.

**கடகம்**

மனதில் இருந்த குழப்பம் தீரும். குடும்ப பிரச்னைகள் குறையும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். இழுபறியாக நின்ற விஷயம் ஒன்று நல்ல முடிவுக்கு வரும்.

**சிம்மம்**

வெளியூர் பயணங்கள் நன்மை தரும். கூடுதலாக உழைப்பீர்கள். கடன் பிரச்னை குறையும். மனதில் உற்சாகம் பொங்கும் நாள். வியாபாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் அற்புதமான நாள்.

**கன்னி**

விடா முயற்சியுடன் செயல் ஒன்றில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தினர் பற்றி மனதில் இருந்து வந்த கவலை ஒன்று நீங்கும். கல்வி தொடர்பான பிரச்னைகள் குறையும். மனதில் தைரியம் கூடும்.

**துலாம்**

முயற்சியில் வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு நீங்கள் எண்ணியதை செய்து முடிப்பீர்கள். தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் இன்று ஈடுபடுவீர்கள்.

**விருட்சிகம்**

எதிர்பார்த்த இடத்திலிருந்து தேவையான பண உதவியை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபவிஷயம் ஒன்று நடைபெறும். மகிழ்ச்சி.குடும்பத்தினருடன் சந்தோஷமாக வெற்றியை கொண்டாடுவீர்கள்.

**தனுசு**

விருப்பப்பட்ட விஷயம் ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். செலவுகளை குறைக்கத் திட்டமிடுவீர்கள். மனதில் இருந்த படபடப்பு நீங்கும். பணியிடத்தில் எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டு.

**மகரம்**

குழந்தைகளின் முன்னேற்றத்தால் உங்களுக்கு சந்தோஷம் ஏற்படும். பணியாளர்களுக்கு எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள்.

**கும்பம்**

அலுவலகத்தில் கூடுதலாக பணியாற்றி நன்மை காண்பீர்கள். இன்று எந்த விஷயத்திலும் கவனமாகச் செயல்படுவது நல்லது. புதிய பதவிகள் காரணமாக உங்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும்.

**மீனம்**

குடும்பத்தினரை அனுசரித்து செல்வது உங்களுக்கு நன்மை தரும். வாழ்க்கைத்துணையின் வாழ்வில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். பேச்சின் இனிமை, சாதுர்யம் காரணமாக கூடுதல் பலன் பெறுவீர்கள்.

# கருத்து சுதந்திரத்துக்கு தி.மு.க. ஆட்சியில் இடம் இல்லை

## ஜெயக்குமார் குற்றச்சாட்டு



சென்னை, டிசெ 14

“தி.மு.க. ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்து விட்டது, கருத்து சுதந்திரம் இல்லை. ஆட்சிக்கு எதிராக யார் கருத்து தெரிவித்தாலும் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்” என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் குற்றம்சாட்டி உள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளர் ஜெயக்குமார் மாங்காடு பகுதியில் தேர்தலை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

“பொதுமக்கள், அ.தி.மு.கவினரின் எண்ணம் ஜெயலலிதாவின் இல்லத்தை நினைவில்லமாக மாற்றுவது தான். அ.தி.மு.கவின் நிலைப்பாடும் அது தான். தீபக், தீபா ஆகியோர் பெருந்தன் மையோடு இல்லத்தை நினைவில்லமாக மாற்ற ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்த தீர்வு.

ஆட்சிக்கு எதிராக யார் கருத்து தெரிவித்தாலும் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை தான் திமுகவினர் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கட்டுமான பொருட்கள், அத்தியாவசியப் பொருட்களின் விலை மலை போல் உயர்ந்து கொண்டிருக்கின்றது. சட்ட ஒழுங்கு சந்தி சிரிக்கும் அளவுக்கு உள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

# தனித்து நின்றிருந்தால் எப்போதோ ஆட்சியை கைப்பற்றி இருப்போம்

## ராமதாஸ்



சென்னை, டிசெ.14

தனித்து நின்றிருந்தால் ஆட்சியை கைப்பற்றி இருப்போம் என சேலத்தில் நடந்த கூட்டத்தில் பா.ம.க. நிறுவுநர் எஸ். ராமதாஸ் தெரிவித்திருக்கிறார்.

சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட பா.ம.க. பொதுக்குழு கூட்டம் சேலத்தில் நேற்று நடந்தது. மாநில தலைவர் ஜி. கே.மணி முன்னிலை வகித்தார். இந்த கூட்டத்தில் ராமதாஸ் பேசும்போது, நான் உங்களுக்காக பொது வாழ்க்கைக்கு வந்து 42 ஆண்டுகள் ஆகிறது. உங்களை சரியாக வழிநடத்தவில்லையா? என்ன தவறு செய்து விட்டேன். 370 சாதியினரும் பயன்பெற போராடி இடஒதுக்கீடு வாங்கினோம். கிடைத்த இடஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5 சதவீதம் கிடைக்கத்தான் பாடுபட்டேன். 108 சமூகத்தினர் எதிர்த்து, தடுத்து விட்டனர். தற்போது, அதற்கு தடை ஆணை பெற உயர் நீதிமன்றில் முறையிட்டுள்ளோம்.

வட தமிழகத்தில் தடுக்கி விழுந்தால், வன்னியர்கள் மீதுதான் விழ வேண்டும். அப்படி இருக்கும் நிலையில், நாம் ஆட்சியை கைப்பற்றி இருக்க வேண்டும். வன்னியர்கள் மட்டும் 2 கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களை நம்பித்தானே கட்சியை ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் தனியாக போட்டியிட்டு 4 இடங்களை வென்றோம்.

அப்படியே தொடர்ந்து தனித்து போட்டியிட்டு இருந்தால், ஆட்சியை கைப்பற்றியிருக்கலாம். ஆனால், சிலர் கூறியதன் பேரில் கூட்டணி அமைத்து போட்டியிட்டு தோற்றோம். தேர்தலில் கூட்டணி என்றாலே காலை வாருவதாக இருக்கிறது. கூட்டணி தர்மமெல்லாம், அதர்மமாகிவிட்டது. கடந்த தேர்தலில் 23 தொகுதியில் போட்டியிட்ட நிலையில், குறைந்தது 15 தொகுதியிலாவது வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

கர்நாடகாவில் 40 தொகுதிகளை வென்ற குமாரசாமி 3 முறை முதல்வராகிவிட்டார். அவரது தந்தை பிரதமரே ஆகியிருக்கிறார். நீங்கள் ஒன்று சேர்ந்து பா.ம.க.விற்கு ஆதரவு அளித்திருந்தால், இங்கும் அதுபோல் நடந்திருக்கும். அதனால், முடிவெடுக்க வேண்டிய இடத்தில் நீங்கள்தான் இருக்கிறீர்கள். எந்த கட்சியில் வன்னியர்கள் இருந்தாலும், வாக்கு மட்டும் மாம்பழத்திற்கு போட வேண்டும். அப்படி செய்தால், 70 முதல் 80 எம்.எல்.ஏ. வரமுடியும். பிறகு மற்ற சமூகத்தினரும் ஏற்று கொள்வார்கள்” என்று ராமதாஸ் தெரிவித்தார்.

# மார்க்சிஸ்ட் மூத்த எழுத்தாளர் என். ராமகிருஷ்ணன் காலமானார்



மதுரை, டிசெ 14

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும்,சுதந்திரப் போராட்ட வீரருமான என்.சங்கரய்யா அவர்களின் சகோதரரும்,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த எழுத்தாளருமான என்.ராமகிருஷ்ணன் நேற்று முன்தினம் இரவு மதுரையில் காலமானார்.

அவரின் மறைவிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

82 வயதான என்.ராமகிருஷ்ணன் அவர்கள தமிழில் 76 நூல்கள், ஆங்கிலத்தில் 10 நூல்கள், 25-க்கும் மேற்பட்ட மொழியாக்கங்கள் என வாழும் பல்கலைக்கழகமாகவே திகழ்ந்தவர்.

மேலும், இவர் கம்யூனிச இயக்க வரலாற்றை ஆவணப்படுத்துவதை தனி மனித இயக்கமாகவே மேற்கொண்டவர். இவர், எழுதிய மார்க்ஸ்- பெரியார் -அம்பேத்கர் என்ற நூல் பெரிதும் வரவேற்பு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை புத்தக கண்காட்சி ஜன. 6 ஆரம்பம்

சென்னை, டிசெ 41

சென்னை நந்தனத்தில் -கண்காட்சியை ஜனவரி 6ஆம் திகதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

ஆண்டுதோறும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் நடைபெறும் புத்தக திருவிழா வரும் ஆண்டு ஜனவரி 6-ம் தேதி தொடங்கி 23-ம் தேதி வரை நடைபெறுகிறது.

2022-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குத்துவிளக்கு ஏற்றி  தொடங்கி வைக்கிறார்.

வாரநாட்களில் மதியம் 3 மணி முதல் இரவு 8.30 மணி வரை புத்தகக் காட்சி நடைபெறும் எனவும், விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல் இரவு 8.30 வரை புத்தகக்கண்காட்சி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்னும் இரு வாரங்களில் நாட்டில் பஞ்சம் ஏற்படும்!

## ஆளும் கட்சி எம்.பி. அபாய எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 14

**“இன்னும் இரு வாரங்களில் அந்நிய செலாவணி கையிருப்பு பூச்சியத்துக்கு வந்துவிடும். ஓரிரு வாரங்களில் பஞ்சமும் ஏற்பட்டு விடும்.” _ என்று அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதால் அமைச்சரவையில் உள்ள பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் ஜனாதிபதியின் அடிமைகளே! தனி நபர் ஆட்சிக்காகவே 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அதேவேளை, இன்னும் இரு வாரங்களுக்குள் அந்நிய செலாவணி பூச்சிய மட்டத்துக்கு வந்துவிடும். ஓரிரு வாரங்களுக்குள் பஞ்சமும் ஏற்படும். அத்தியாவசியப் பொருட்களைக்கூட விநியோகிக்கமுடியாத நிலைமை அரசுக்கு ஏற்படும். குழப்பகரமான சூழ்நிலை உருவாகும்-என்றார். (அ)



# சங்கமன்கண்டியில் புத்தர் சிலை கடும் எதிர்ப்பால் அகற்றப்பட்டது

அம்பாறை, டிசெ. 14

அம்பாறை மாவட்டம் சங்கமன்கண்டி கோமாரி பகுதியில் கடந்த சனிக்கிழமை பிக்குகளால் பொலிஸ் பாதுகாப்புடன் இரவோடு இரவாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் அப்பகுதி தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து நேற்று முன்தினம் அகற்றப்பட்டது.

இரகசியமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு கோரிக்கை முன்வைத்து அப்பகுதி அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற திருக்கோவில் பொலிஸார் கலவரங்கள் எற்படாதவாறு நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

திருக்கோவில், பொத்துவில், காரைதீவு ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உதவித் தவிசாளர் மற்றும் பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், கணக்காளர் ஆகியோரும் சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இந்த நிலையில் 2 நாட்களுக்குள் புத்தர் சிலையை அகற்றுவதாக திருக்கோவில் பொலிஸார் உறுதியளித்த நிலையில் மக்கள் அங்கிருந்து சென்றனர்.

இந்நிலையில் மக்களின் பலத்த எதிர்ப்புப் போராட்டத்தால் குறித்த புத்தர் சிலை அகற்றப்பட்டது. (அ)

# அரசியல் தலைவர்கள் கூறும் அனைத்துக்கும் நாங்கள் ‘ஆமென் ஆமென்’ என கூறமுடியாது

## கொழும்பு பேராயர் மல்கம் விசனம்



கொழும்பு, டிசெ. 14

அரசியல் தலைவர்கள் கூறும் அனைத்துக்கும் ‘ஆமென் ஆமென்’ என கூற முடியாது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து ஆராய்ந்த ஆணைக்குழு மற்றும் அதன் அறிக்கை ஒரு கேலிக்கூத்து போன்றது எனவும் அவர் விமர்சித்தார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கனேமுல்லை பொல்லாத்த தேவாலய பெருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

மதத் தலைவர்கள் அனைத்த சந்தர்ப்பங்களிலும் சுயாதீனமாக இருக்க வேண்டும். மதத் தலைவர்கள் சுயாதீனத் தன்மையை அரசியல் நன்மைக்காக பயன்படுத்தினால் வெட்கப்பட வேண்டும்.

அரசியல் தலைவர்கள் கூறும் அனைத்துக்கும் ‘ஆமென் ஆமென்’ என கூறமுடியாது.

இன்று மக்கள் நிர்க்கதியாகியுள்ளமைக்கு அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி மதத் தலைவர்களும் காரணம். இந்த நாடு மத நாடு.

இதேநேரம், ஈஸ்டர் தாக்குதல் குறித்து இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அத்தோடு, தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் இன்னும் தலைமறைவாக உள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக் குழுவினால் தொகுக்கப்பட்ட அறிக்கையில் அவர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளபோதிலும் அவர்களை இதுவரை விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை-என்றார். (அ)

# மருத்துவப் பரிசோதனைக்காக சிங்கப்பூர் சென்ற கோட்டாபய

கொழும்பு, டிசெ. 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்காக சிங்கப்பூர் சென்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

சிங்கப்பூரில் சில தினங்கள் அவர் தங்கியிருந்து மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வாரென தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி நாடு திரும்பும்வரை அவரின் பொறுப்புக்களை பிரதமர் கவனிக்கவுள்ளார்.

இதேவேளை,மோசமான சுகயீனம் காரணமாகவே ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகளை ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் நிராகரித்தன.

அவர் வழமையான மருத்துவ பரிசோதனைக்கே சென்றுள்ளாரென அந்த வட்டாரங்கள் கூறின.(அ)

# உரக் கொள்கலன்கள் வெடிப்பதை பெரிதுபடுத்துவதில் நியாயமில்லை

## அமைச்சர் மஹிந்தானந்த கருத்து

800,000 விவசாயிகளுக்கு தரமான உரம் வழங்கப்பட்ட நிலையில் நான்கைந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கொள்கலன்கள் வெடித்துச் சிதறியதாக மாத்திரம் பேசுவதில் நியாயமில்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கொள்கலன்கள் வெடித்து சிதறிய சம்பவங்கள் பல இடங்களில் பதிவாகியிருந்தன.

நான்கைந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட திரவ உரக் கொள்கலன்கள் அதிக நைதரசன் செயல்பாடு காரணமாக வெடித்துச் சிதறியுள்ளன என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறினார்.

இவ்வாறு வெடித்த திரவ உரம் துர்நாற்றம் வீசுவதாகவும், மீன் கழிவுகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது போல் இருப்பதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

மீன் சார்ந்த உரத்தை விவசாயிகள் நீண்ட காலமாக பயன்படுத்தி வருகின்றனர் என்றும் இது நல்ல நைதரசன் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.



எவ்வாறாயினும் வெடித்ததாகக் கூறப்படும் உரம் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என இதுவரை விவசாய அமைச்சு அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பொறுப்பற்ற ஆட்சியாளரால் முழு நாடுமே அபாயத்துக்குள்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14

பொறுப்பற்ற ஆட்சியாளர்களினால் முழு நாடும் அபாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போதைய அரசாங்கம், தமக்கு சாதகமான தீர்மானங்களை கொண்டு வந்து நாட்டை மோசமான நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாக சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தினார்.

இதேவேளை, நாட்டில் கொரோனா மரணங்கள் நாளாந்தம் பதிவாகின்றன. ஆனால் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காதமையால் தற்போது கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தை அண்மித்துள்ளதாக அவர் கவலை வெளியிட்டார்.

இதற்கிடையில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் 620க்கும் அதிகமாக பதிவானபோதும்கூட உரிய விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் தவறியுள்ளது எனவும் சஜித் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் தற்போது இலங்கை ஏல விற்பனை பூமியாக மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களுக்கும் நட்புறவு கொண்டாடும் கும்பலுக்கும் நாட்டின் தேசிய வளத்தை தாரைவார்த்து கொண்டிருக்கும் தறுவாயில் அமைச்சரவை வெறும் சமிக்ஞை தூணாக மாறியுள்ளது என வும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ரஞ்சனை விடுதலை செய்ய வலியுறுத்தி ஜெனிவாவில் இலங்கையர் போராட்டம்

ஜெனிவா, டிசெ. 14

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகருமான ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யக் கோரி, ஐரோப்பாவில் வாழும் இலங்கையர்கள் குழுவொன்று ஜெனிவாவில் அமைதியான முறையில் போராட்டமொன்றை நடத்தியுள்ளது.



ஜெனிவாவிலுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த இலங்கையர்கள் பலர் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மக்களை பட்டினியில் தள்ளவேமாட்டோம்!

## தானே பொறுப்பு என்கிறார் பந்துல

கொழும்பு, டிசெ. 14

அத்தியாவசிய பொருட்களைத் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிக்கும் பொறுப்பை தான் ஏற்றுக்கொள்வதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும் ஒருபோதும் மக்களைப் பட்டினியில் தள்ளப்போவதில்லை என்றும் அவர் உறுதியளித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், ஒரு கிலோ



அரிசியின் விலையை 300 ஆக உயர்த்தத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

இருப்பினும் அந்த திட்டங்கள் தோற்கடிக்கப் பட்டன. தற்போது 1 கிலோ நாட்டு அரிசி 99.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது-என்றார். (அ)

# ஜனாதிபதியின் விசேட அதிகாரம் மூலம்

# ஜனவரி 18ஆம் திகதி வரை பாராளுமன்று ஒத்திவைப்பு!

கொழும்பு, டிசெ. 14

**ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரத்தின் மூலம் பாராளுமன்றம் எதிர் வரும் ஜனவரி 18 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பாராளுமன்ற அமர்வுகளை நிறுத்தி ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி அறிவித் தல் ஒன்று வெளியிடப்பட் டுள்ளது.

அரசமைப்பின் 70 ஆவது சரத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதியினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட் டுள்ளது.

இதற்கு அமைய 2022 ஜனவரி 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு மீண்டும் பாராளுமன்றம் கூடும் என அந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒதுக்கீட்டுச் சட்டமூல (2022) மூன்றாம் மதிப்பீடு சபையினால் டிசெம்பர் 10 ஆம் திகதி நிறைவேற்றப் பட்டது. இத்துடன் குழுநிலை விவாதம் முடிவுக்கு வந்தது.

வாக்கெடுப்புக்கு விடப் பட்டபோது, சட்டமூலத்துக்கு ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக 64 வாக்குகளும் அளிக் கப்பட்டன.

2021 நவம்பர் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 2022 வரவு செலவுத் திட்ட கூட்டத்தொடர் டிசெம்பர் 10 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

# இரு எரிவாயு நிறுவனங்கள்மீது அடுத்த சில தினங்களில் வழக்கு

கொழும்பு, டிசெ. 14

எரிவாயு வெடிப்பினால் ஏற்பட்ட சேதங்களுக்கு லிட்ரோ மற்றும் லாப் ஆகிய இரண்டு எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக அடுத்த சில நாட்களில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகாரசபையின் சட்டப் பிரிவு தற்போது வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறவுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்களுடன் இணைக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் அல்லது அவற்றின் பராமரிப்பை இரண்டு எரிவாயு நிறுவனங்களும் கவனிக்கவில்லையென் றும் அதன்படி அந்தந்த நிறுவனங்கள் தங்கள் பொறுப்பு களை புறக்கணித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற பல சம்பவங்களில் எரிவாயு சிலிண்டருடன் இணைக்கப்பட்ட கருவிகள் சேதமடைந்துள்ளதாகவும், இதற்கு எரிவாயு நிறுவனங்கள் காரணமா என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எரிவாயு தொடர்பான விபத்துக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாந்த வல்பொல தலைமையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக் கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை அகற்ற சீன கப்பல் வருகிறது

கொழும்பு, டிசெ. 14

கடலில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பலை அகற்ற சிறப்புக் கப்பல் இந்த வார இறுதியில் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

சீனக் கப்பல் எதிர்வரும் டிசெம்பர் 19ஆம் திகதி வரும் என அவர் கூறினார்.

மற்றொரு கப்பல் தற்போது கடல் படுக்கையில் உள்ள கொள்கலன்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# யுகதனவி ஒப்பந்தம் நாட்டை காட்டிக்கொடுக்கும் துரோகம்

## பெரமுன எம். பி. போர்க்கொடி

கொழும்பு, டிசெ. 14

கெரவலப்பிட்டிய,, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றும் ஒப்பந்தம் தேசத்தை காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குற்றம்சுமத்தி யுள்ளார்.

உடன்படிக்கையை கைச்சாத்திட அனுமதித்த அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் இலங்கையின் எதிர்காலத்துக்கு துரோகம் இழைத்த குற்றவாளிகள் என பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

இந்த உடன்படிக்கை இரகசியமாக கைச்சாத்திடப் பட்டமைக்கு தெளிவான ஆதாரம் கிடைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வீரக்



கொடி தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் இன்னும் செல்லுபடியாகும் என்பதால், சட்டமா அதிபரிடம் இருந்து மறைத்து கையெழுத்திட்ட ஒப்பந்தம் அரசியல் சாசனத்தை மீறுவதாக உள்ளது எனவும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டுக்கு துரோகம் இழைத்தவர்கள் ஜனாதிபதியினால் வெளிக் கொணரப் படவேண்டும், பதவியில் இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வீரக்கொடி கோரிக்கை விடுத்தார். (அ)

# அரசு பங்காளிக் கட்சிகளுடன் கதைத்து எவ்வித முடிவுகளையும் எடுப்பதில்லை

## குற்றம் சுமத்துகிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, டிசெ. 14

நடைமுறை அரசாங்கம் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடி எந்தவித முடிவுகளையும் எடுப்பதில்லை என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார்.

தலவாக்கலை, அக்கரபத்தனை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதியாக இருந்தபோது எம்முடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்தார். ஆனால், அவ்வாறான நடைமுறையை நடப்பு அரசாங்கத்தில் காண முடியவில்லை. அதனால் அரசாங்கத்தில் உள்ள குறைப்பாடுகளை எமக்கு சுட்டிக்காட்ட முடியாமல் உள்ளது.

தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரம் சரிவை நோக்கி பயணிக்கின்றது. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் சிரமப்படுகின்றனர். இவ்வாறான பல பிரச்னைகள் உள்ளன.

இவை தொடர்பில் கதைக்க எமக்கு சந்தர்ப்பமில்லாமல் உள்ளது. எனக்கு உறுதியளித்த தபடி அமைச்சரவையில் எனக்கு எந்தவித பொறுப்பும் வழங்கப்படவில்லை. நான் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே. ஆகவே அமைச்சரவையில் எடுக்கும் முடிவுகளுக்கு ஆலோசனை வழங்கவும் முடியாதுள்ளது.



மக்கள் சிரமத்துக்குள் விழுவதை தடுக்க என்னிடம் பல யோசனைகள் உள்ளன. கோவிட் சமூகத்தில் பரவலடையும்போது அதனை தடுக்கப் பிரத்தியேக வேலைத்திட்டம் ஒன்றை அமுலாக்க வேண்டும். அது தொடர்பான எனது ஆலோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனது ஆலோசனைகள் ஏற்கப்பட்டிருக்குமானால் நிலைமை கடினமாய் இருந்திருக்காது-என்றார். (அ)

# தௌபீக் இடைநிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 14

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக், அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

கட்சியின் தீர்மானத்தை மீறி பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்ததன் காரணமாக, உடன் அமுலாகும் வகையில் தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளார் என தெரிவிக் கப்பட்டது.

அவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க விளக்கம் கோரப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார். (அ)

# தடுப்பூசி ஏற்றியமையால் இறப்பு விகிதம் குறைவு!

கொழும்பு, டிசெ. 14

இலங்கையில் கொரோனா தொற்றினால் ஏற்படும் இறப்பு வீதம் குறைவதற்கு தடுப்பூசி நடவடிக்கையே காரணம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இருப்பினும், தடுப்பூசியை செலுத்திக்கொண்டு பின்னரும் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பொதுமக்கள் பின்பற்றவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டு மக்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதோடு கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த நடவடிக்கையினால் சிறுவர்கள் உட்பட தத்தமது குடும்ப உறுப்பினர்களை தொற்று நோயில் இருந்து காப்பாற்ற முடியும் என்றும் உபுல் ரோஹன குறிப்பிட்டார். (அ)

# 2022 இல் நாட்டுக்கு ஆபத்து!

## அபாய சங்கு ஊதுகிறது எதிரணி

கொழும்பு, டிசெ. 14

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாடு அதளபாதாளத்திற்குள் விழும் நிலை உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுமானால் அதற்கு தற்போதைய அரசாங்கம் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா - வலப்பனையில் நேற்று முன்தினம் விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சரியான விவசாய ஆலோசனைகளை வழங்க முடியாதவர்களே ஜனாதிபதியுடன் உள்ளனர். சேதன பசளை பாவனைக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால், இது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையே தவறானது என்கிறோம். தற்போது அவர்கள் இது தொடர்பில் பிறப்பித்த வர்த்தமானி முன்பு போல் வாபஸ் பெறபட்டுள்ளது. எனினும் பெரும்போகச் செய்கை தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.



அப்படியானால் நெல் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் பூச்சியமாக மாறும். மரக்கறி உற்பத்தியும் அப்படிதான். விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாகவே மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. தேயிலை உற்பத்தியும் அவ்வாறுதான். எமது தேயிலை வெளிநாடுகளுக்கே அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எனவே, இவர்களின் செயல்பாடுகளால் தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.. இதற்கு ஜனாதிபதியுடன் இருக்கும் ஒரு சில மனநலம் குன்றியவர்களின் ஆலோசனைகளே காரணம்.

எனவே, எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்பட கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆகவே, எதிர்வரும் 2022ஆம் ஆணடு வரவு - செலவு திட்டத்தில் தற்போதைய அரசாங்கம் வெடித்து சிதறும் என்பதே உண்மை - என்றார். (அ)

# நாணய நிதியத்தை நாடவேண்டும் அரசு

## சுதந்திரக்கட்சி யோசனை



**கொழும்பு, டிசெ. 14**

**சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு பேச்சு நடத்தவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆலோசனை வழங்கியுள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறியவை வருமாறு:

தற்போதைய சூழ்நிலையில் ஓர் மாற்றுத் தேர்வாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. ஏனெனில் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான ஆகிய நாடுகளும் உதவிகளை குறைத்துள்ளன.

சர்வதேச நாணய நிதியம் சில நிபந்தனைகளை முன்வைக்கும். எனவே, பேச்சு நடத்தி, எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

நாட்டை மீட்பதற்கு அனைத்து கட்சிகளும் ஒன்றுபட வேண் டும்-என்றார். (அ)

# நத்தார் தினத்தை முன்னிட்டு தூதர்களுடன் பிரதமர் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கான வெளிநாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களுக்காக வெளிவிவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நத்தார் தின விசேட சந்திப்பு மற்றும் இரவு விருந்துபசார நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

- இவ்விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்ட தூதுவர்கள் உள்ளிட்ட இராஜதந்திர சேவையின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பவித்ராதேவி வன்னியாராச்சி, அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், தாரக பாலசூரிய, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, சுரேன் ராகவன் மற்றும் பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# முள்ளிப்பாலத்துக்கு அருகாமையில் வீதியில் வெடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

முள்ளிப்பாலத்துக்கு அருகாமையில் வெடிப்பு ஏற்பட்டு வீதி கீழ் இறங்கியுள்ளமையால் பொது மக்கள் அவதானமாக பயணிக்குமாறு கோரப்படுகின்றது.

வடமராட்சியில் இருந்து தென்மராட்சி நோக்கி செல்லும் புலோலி- கச்சாய் வீதியிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது. வடமராட்சியில் இருந்து தென்மராட்சி நோக்கி பயணிப்பவர்கள் மற்கும் தென்மராட்சியில் இருந்து வடமராட்சி நோக்கி பயணம் செய்பவர்கள் இப்பாதையை அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதி புனரமைப்பு செய்யப்பட்டு ஒரு வருடமே ஆகின்ற நிலையில் முள்ளி ஐய்யங்கண்டி மயானத்துக்கு அருகாமையில் உள்ள பாலத்துக்கு அருகாமையிலேயே வெடிப்பு ஏற்பட்டு வீதி கீழ் இறங்கியுள்ளது. (அ-02)

# யாழில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி வழங்கல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 14

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மூன்றாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகார பணிமனை பிரிவுகளிலும் இந்த செயற்திட்டம் நேற்றுக் காலை ஆரம்பமானது.

கோவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய்பரவும் ஆபத்துள்ள மக்கள் தொகுதியினருக்கும் (தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பணி புரிவோர், சுகாதாரதுறை சாராத முன்னிலை ஊழியர்கள்) மேலதிகமாக மூன்றாவது கோவிட்-19 தடுப்பூசி நேற்று திங்கட்கிழமை முதல் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது மூன்று மாத இடைவெளியின் பின்னர் இத் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டு தடவைகள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களில் கோவிட் - 19 தொற்றுக்கு உள்



ளானவர்கள் அவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 06 மாத கால இடைவெளியின் பின்னர் இந்த தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவர்களில் சினோபார்ம் அல்லது ஏதாவது ஒரு கோவிட்-19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையை சமர்ப்பித்து மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமைகளில் யாழ். மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்திய சாலைகளிலும் இத்தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள வைத்தியஅதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ளமுடி யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-03)

## கோவிட் சுனாமியைத் தவிர்க்க

# 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் பூஸ்டர்!

கொழும்பு, டிசெ. 14

20 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கையர்களும் இன்று திங்கட்கிழமை முதல் பைசர் பூஸ்டர் கோவிட் தடுப்பூசிகளைப் பெற முடியும் என மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

தடுப்பூசிகளைப் பெறாது தவிர்தால் புதிய ஆண்டில் கோவிட் சுனாமி அலையை எதிர்கொள்ளக்கூடும் எனவும் அவர் எச்சரித்தார்.

20 வயதுக்கு மேற்பட்ட ஏற்கனவே ஏதேனும் இரண்டு கோவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட எவரும் பைசர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சன்ன ஜயசுமண கூறினார்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் சமூக முடக்கல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை எனவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண குறிப்பிட்டார்.

எனினும் பூஸ்டர் தடுப்பூசிகளைக் பெற்றுக்கொள்ளாது மக்கள் அதிகளவில் ஒன்றுகூடினால் புதிய ஆண்டில் மற்றொரு கொவிட் சுனாமியை எதிர்கொள்ளத் தயாராகவேண்டும் எனவும் அவர் எச்சரித்தார்.

பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் தொற்றுக்குள்ளானாலும் தலைவலி, உடல் வலி மற்றும் வாந்தி உள்ளிட்ட சிறிய அறிகுறிகளுடன் தப்பிக்கொள்ளும் சாத்தியம் உள்ளது. இல்லையேல் தொற்று நோயால் ஆபத்து அதிகம் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு



# அமெ. இராஜாங்க திணைக்கள அறிக்கை; சொல்வதும், சொல்லாது சொல்வதும்

**போர்** இல்லாதொழிக்கப்பட்டதொரு சூழலில், இலங்கை அரசு விரும்பும் உள்ளகப் பொறிமுறைக்கு ஏற்ற முறையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை தென்படுகிறது. இலங்கை இராணுவத்தின் கீழ்நிலை அதிகாரிகள் இருவருக்கு அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த இரண்டு பேருடைய தடைகள் மட்டுமல்ல, இதற்கு அப்பாற்பட்ட பல நடவடிக்கைகளும் இலங்கைப் பொறுப்புக்கூறல் தொடர்பாக அமெரிக்கா மேற்கொள்ளவுள்ளதாக அறிக்கை வெளிப்படுத்துகின்றது. அதாவது தமிழர் தரப்பு மீதும் தடைகள் வரலாம் என்பதும், மீண்டும் ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா ஒபாமா காலத்து அணுகுமுறையைத் தொடரவுள்ளது என்பதுமே அதன் அர்த்தமாகும்.

ஆகவே அமெரிக்க மனித உரிமை நாள் அறிவிப்புக் குறித்து தமிழர்கள் அதீத மகிழ்ச்சி கொள்ளத் தேவையில்லை. அங்கே உட்பொதிந்திருக்கும் ஆபத்துக்கள் குறித்தே சிரத்தை கொள்ள வேண்டும், என்று நீண்ட காலமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள நடவடிக்கைகளைக் கண்காணித்து வரும் பகிரங்கமாகப் பெயர் குறிப்பிட விரும்பாத தமிழ்ச் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவர் உட்பட ஆறு நாடுகளின் இராணுவ மற்றும் அரசியல் அதிகாரிகள் பன்னிரெண்டு பேருக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது நாட்டை நோக்கிய பயணத் தடைவிதித்து நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. அவர்களுக்கும் அப்பால் மேலும் சிலரையும் உள்ளடக்கி, மொத்தம் 15 பேருக்கும் 10 கட்டமைப்புகளுக்கும், திறை சேரி ஊடாகாவும் பிறிதான தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்ட பன்னிரெண்டு அதிகாரிகளும் முழுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் என்ற தகவல்களின் அடிப்படையில், அந்த நபர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையின் முன்னாள் லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க ஆகியோரும் தடைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

முன்னாள் இலங்கைக் கடற்படைப் புலனாய்வு அதிகாரி சந்தன ஹெட்டியாராச்சி 2008 முதல் 2009 வரை, "திருகோணமலைப் பதினொருவர்" என்று சொல்லப்பட்ட மனித உரிமை மீறல்களில் எண்மர் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டவராகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு டிசம்பர் காலத்தில், யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட்டுத் தமிழ்க் கிராமத்தவர்களைப் படுகொலை செய்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்து சுனில் ரத்நாயக்கவிற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பேருடைய தடைகள் மட்டுமல்ல இதற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளும் இலங்கைப் பொறுப்புக்கூறல் தொடர்பாக மேற்கொள்ளவுள்ளதாக அமெரிக்க அறிக்கையின் தொனி காண்பிக்கின்றது. அதாவது தமிழர் தரப்பு மீதும் தடைகள் வரலாம் என்பதும், மீண்டும் ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா ஒபாமா காலத்து அணுகுமுறையைத் தொடரவுள்ளது என்பதுமே அதன் அர்த்தமாகும்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்குமான பொறுப்புக்கூறலுக்கு ஏற்ற வகையில் அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கையே இந்த இரு இராணுவ அதிகாரிகளுக்கான பயணத் தடை என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி ஜே பிளிங்கென் அறிவித்திருக்கிறார்.

உகண்டாவைச் சேர்ந்த ஒருவர், சீனாவைச் சேர்ந்த நால்வர், பெலரஸ் நாட்டைச் சேர்ந்த இருவர், பங்களாதேஷைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் இராணுவ லெப்ரினன்ட் கேணல் ஒருவரும் மெக்சிகோவில் ஒருவருமாக மொத்தம் பன்னிருவருக்கு அமெரிக்காவுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் உள்ள உய்குர் முஸ்லிம்கள் இன அழிப்புக்கு உள்ளாவதாக அமெரிக்க, மற்றும் கனடாத் தரப்புகள் பகிரங்கமாகவே குற்றஞ்சுமத்தும் நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் சீனாவின் மோசமான மனித உரிமை மீறல் என்று மாத்திரமே குற்றம் சுமத்தப்பட்டுத் தடைப் பட்டியலில் சீன இராணுவ அதிகாரிகள் நால்வர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மீது 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் தடை விதித்திருந்தது. அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ இத் தடையை தனித்துவமான அறிக்கையிடல் மூலம் பிறப்பித்திருந்தார்.

சவேந்திர சில்வாவுக்கு இலங்கையில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. போரின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவியும் வகித்திருந்தார். இந்த நிலையிலேயே மைக் பொம்பியோ இலங்கையின் அதியுயர் நிலையில் உள்ள அதிகாரியான சவேந்திர சில்வா மீது தடை விதித்திருந்தார். 2009 ஆம் ஆண்டு 58 ஆவது படைப் பிரிவின் தலைவராக சவேந்திர சில்வா பதவி வகித்திருந்த போது, இறுதிக் கட்டப் போரில் மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றங் களைப் புரிந்தவர் என்ற குற்றச்சாட்டிலேயே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயணத் தடை அமைந்திருந்தது.

> அமெரிக்காவுடன் முரண்படுவது போல காண்பித்துக் கொண்டு சீனாவின் கடும் பிடிக்குள் இருந்து மீள்வதற்கான உத்தியை இலங்கை கையாண்டு வருகின்றது என்பதையும் உன்னிப்பாக அவதானிப்போரால் கூற முடியும்.




அ.நிக்ஸன்

ஆனால், ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தின் இராஜாங்கச் செயலாளர் அன்டனி ஜே பிளிங்கென், இலங்கையின் கீழ் நிலை இராணுவ அதிகாரிகள் இருவருக்கே பயணத் தடை விதித்திருக்கிறார். அதுவும், 2009 இன அழிப்புப் போருக்குள் நேரடியாகச் செல்லாமல் 2000 ஆம் ஆண்டையும் 2008-2009 இல் திருகோணமலையையும் தொட்டுச் செல்ல ஆரம்பித்துள்ளார். அதுவும் சுனில் ரட்நாயக்கா என்ற இராணுவ அதிகாரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினால் கடந்த ஆண்டு பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட்ட ஒருவர்.



ஆகவே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தடைப் பட்டியல் அறிவிப்புத் தொடர்பாக ஈழத்தமிழர்கள் அதீத மகிழ்ச்சியடைய வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில், எதிர்காலத்தில் பொறுப்புக்கூறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்ற இராஜாங்கத் திணைக்கள அறிக்கையின் தொனி, தமிழர்கள் மீதும் தடைகள் வரும் என்ற செய்தியையும் சொல்லாது சொல்வதாகத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆகவே இலங்கையின் உள்ளகப் பொறிமுறைகளை வலியுறுத்தும் வகை யிலேயே அதற்கு வழிகாட்டக் கூடிய முறையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிவிப்பு அமைந் துள்ளது.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் அமெரிக்காவின் விருப்பத்துக்கு ஏற்ப ஜெனீவா மனித உரிமைச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது போன்று, அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்கா புதிய தீர்மானத்தைச் சமர்ப்பிக்கும் வாய்ப்புகளும் உண்டு என்பதையே அந்த அறிக்கை சொல்லாமல் சொல்கிறது.

அதாவது இலங்கை அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறைக்கு ஏற்ற முறையில் ஜெனீவா தீர்மானத்தைக் கொண்டு வரும் அடிப்படையில் தமிழர் தரப்பின் மீதும் குற்றம் சுமத்தி ஈழத் தமிழர் விவகாரத்தை மூடிமறைக்கும் திட்டத்திற்கு மிக நிதானமாக ஜோ பைடன் நிர்வாகம் பிள்ளையார் சுழி போட ஆரம்பித்திருக்கிறது என்பதையும் இந்த அறிக்கை கோடிட்டுக் காண்பித்துள்ளது.

டொனால்ட் ட்ரமபின் நிர்வாகம் ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா மூலமாகவே அணுகியது. இந்தியாவின் விருப்புக்கு உடனடியாகக் கட்டுப்பட மறுத்த இலங்கை அரசை மிரட்டுவதற்கு 2020 பெப்ரவரியில் உயர் நிலைத் தளபதி சவேந்திர சில்வா மீது பயணத்தடையும், பின்னர் தனது பதவிக் கால இறுதிக் கட்டத்தில் 2020 ஒக்ரோபரில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போதும் சவேந்திர சில்வா மீதான பயணத் தடை பற்றிய கேள்விகளுக்கு அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயளார் மைக் பொம்பியோ பதிலளித்தும் இருந்தார்.

ஆனால், பைடன் ஆட்சி மாற்றத்துடன் இந்த நிலையை மாற்றி, அமெரிக்காவோடு இந்தியா ஊடாக அன்றி, தான் நேரடியாகவே பேரம்பேசும் நிலையை கோட்டாபய அரசு தோற்றுவித்துள்ளது.

தற்போது ஜோ பைடன் நிர்வாகம் ராஜபக்‌ஷ அரசாங்கத்துடன் இரகசியமாக அணுகியே ஈழத்தமிழர் தொடர்பான விடயங்களை மேற்கொண்டு வருகின்றது. (9ஆம் பக்கம் பார்க்க...)



# இரட்டைத் தலைமை:
## அ.தி.மு.க. நடத்தும் அரசியல் பரிசோதனை

முன்னாள் முதல்வர்களான ஓ. பன்னீர் செல்வமும் எடப்பாடி பழனிசாமியும் முறையே அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளராகவும் இணை ஒருங்கிணைப்பாளராகவும் போட்டியின்றித் தேர்வாகியிருப்பது அக்கட்சிக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகளால் கட்சித் தலைமையில் மாற்றம் வருமா, அதிருப்தியடைந்தவர்களால் புதிய அணிகள் உருவாகுமா, அ.தி.மு.கவிலிருந்து விலகித் தனிக் கட்சி நடத்துபவர்கள் மீண்டும் இணைவார்களா, அவர்கள் தலைமையைக் கைப்பற்றும் வாய்ப்பு இருக்கிறதா என்பது போன்ற பல கேள்விகளுக்கு முற்றுப்புள்ளியை வைத்திருக்கிறது.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்று தனிப்பெரும் செல்வாக்கு கொண்ட தலைவர்கள் என்று யாரும் இல்லாத நிலையில் கட்சி தனது கட்டுப்பாட்டை இழந்து, தேர்தல் சின்னத்தைப் பறிகொடுத்துவிடக் கூடாது என் பதே அதிமுகவைச் சேர்ந்த கடைக்கோடி தொண்டர்களின் எதிர்பார்ப்பாகவும் விருப்பமாகவும் இருக்கிறது.

பன்னீர்செல்வம், பழனிசாமி இருவருமே கட்சியில் தங்களது இடங்களை விட்டுக்கொடுக்கத் தயாராகவில்லை என்றாலும், ஒருவருக்கொருவர் எதிராக இல்லை என்பதைத் தொண்டர்களுக்குத் தற்போது உணர்த்தியிருக்கிறார்கள்.

தண்டனைக் காலம் முடிந்து, பெங்களூருவிலிருந்து சென்னைக்கு சசிகலா திரும்பியபோதும், தென்மாவட்டங்களை நோக்கி அவர் மேற்கொண்ட பயணத்தின்போதும் அ.தி.மு.கவின் தொண்டர்களில் சில தரப்பினரிடம் சிறு சலனங்கள் எழுந்தன. என்றாலும், அ.தி.மு.கவின் இரண்டாம் கட்டத் தலை வர்கள் வலுவான ஒரு தலைமையின் கீழ் தங்களது விசுவாசத்தைத் தொடர்ந்து நிரூபித்தபடியே இருக்க வேண்டிய கட் டாயத்திலிருந்து விடுபட்டுவிட்டதை விரும்புகிறவர்களாக உள்ளனர்.

இதற்கு முன் எம்ஜிஆரும் ஜெயலலிதாவும் கட்சியின் பொதுச் செயலாளராக பொறுப்பு வகித்த காலங்களில், அவர்களை விடவும் அரசி யலில் அனுபவம் வாய்ந்த மூத்த தலைவர்கள் அவர்களது தலைமையை முழுமனதோடு ஏற்றுக்கொண்டவர்களாகவே இருந்துள்ளனர். பன்னீர்செல்வம்- பழனிசாமி காலத்திலும் அவர்களை விடவும் மூத்த தலைவர்களும் சமகாலத்தவர்களும் கட்சியில் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அதிருப்தி எழாதவரை, இரட்டைத் தலைமை சிக்கலின்றி தொடரும்.

அதே நேரத்தில், இந்த அதிருப்திக் குரல்கள் எழுவதைக் கட்டுப்படுத்துவதில் பன்னீர்செல்வம்-பழனிசாமி இருவருமே உறுதியுடன் இருப்பதை அன்வர் ராஜா கட்சியிலிருந்து நீக்கப்பட்டதிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

பன்னீர்செல்வம், பழனிசாமி இருவரும் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டாலும் மற்றவர்கள் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை என்றே கூறப்படுகிறது. கட்சியிலிருந்து விலக்கிவைக்கப்பட்டவர்கள் கட்சித் தலைமையைக் கைப்பற்றிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையில் வேகவேகமாக நடத்தி முடிக்கப்பட்ட தேர்தல், கட்சிப் பொறுப்புகள் குறித்த வழக்குகளை எதிர்கொள்வதற்கான வியூகம் என்ற பார்வைகளும் உண்டு.

ஒரே வாக்கில் இருவரைத் தேர்ந்தெடுக்கும் முறையும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது. மொத்தத்தில், பன்னீர்செல்வம்- பழனிசாமியின் கூட்டுத் தலைமை கட்சிக்குள் தமது இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பரிசோதனை முயற்சி வெற்றி பெறும் பட்சத்தில், வருங்காலத்தில் மற்ற கட்சிகளுக்கும்கூட இது ஒரு முன்னுதாரணமாக அமையும். சட்டமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் ஒரு வலுவான எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. செயல்பட வேண்டும் என்பதே வாக்காளர்களின் எதிர்பார்ப்பு.

**- இந்து**

**“ பன்னீர்செல்வம், பழனிசாமி இருவரும் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டாலும் மற்றவர்கள் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை என்றே கூறப்படுகிறது. கட்சியிலிருந்து விலக்கிவைக்கப்பட்டவர்கள் கட்சித் தலைமையைக் கைப்பற்றிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையில் வேகவேகமாக நடத்தி முடிக்கப்பட்ட தேர்தல், கட்சிப் பொறுப்புகள் குறித்த வழக்குகளை எதிர்கொள்வதற்கான வியூகம் என்ற பார்வைகளும் உண்டு.**

---

# அமெ. இராஜாங்க திணைக்கள அறிக்கை;

**(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

ஒரு சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவின் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பைச் சேர்ந்த பிரதான கட்சிகளின் வெளியுறவு சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இருவர், இலங்கையில் அரசியல்தீர்வு ஏற்பட வழிவகை செய்ய வேண்டுமென்றும் அது அதிகாரப் பகிர்வின் ஊடாகவும், பிரிக்கப்பட முடியாத இலங்கை என்ற அடிப்படையில் அமைய வேண்டுமெனவும் கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

அவர்களின் கூற்று, ஈழத் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை மறுப்பதாகவும், சமஷ்டிக்கோரிக்கையை அங்கீகரிக்காததாகவுமே வடிவமைக்கப்பட்டிருந்தது. இதுவே ஜீ. எல். பீரிஸின் வெளியுறவுக் கொள்கையின் வெற்றியாகவும், மிலிந்த மொராகொட, மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின், ரொபேர்ட் பிளேக்கின் ஊடான காய் நகர்த்தலாக வும் இருப்பதாக தெரிகிறது,

சுமந்திரன் தலைமையிலான குழுவினர் அமெரிக்கா சென்று பேச்சு நடத்திய பின்னரே அவர்கள் அவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தனர். என்பதும் இங்கு நோக்கத்தக்கது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அணியும் அதிகாரப்பரவலாக்கம் பற்றியே பேசியிருந்தது. இதனையே உலகத் தமிழர் பேரவை தங்களுடைய செயற்பாடாகக் காட்டிக் கொள்ளவும் முற்பட்டது.

இதன் பின்னணியிலேயே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சர்வதேச மனித உரிமைகள் தினம் அன்று வெளியிட்ட அறிக்கையில் இலங்கை தொடர்பான கூற்றுக்களையும் நாம் நோக்க வேண்டும்.

அமெரிக்க- இலங்கை நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிப்போர், இதனை இலங்கை ஒற்றையாட்சி அரசின் உள்ளகப் பொறிமுறைக்கு ஏற்ற செயற்பாடு என்றே சொல்வர்.

அதாவது பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்க முன்னர் கடந்த யூன் மாதம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து இணைய வழி மூலம் சுமந்திரனோடு உரையாடியிருந்தார். பின்னர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ். சுமந்திரன் ஆகியோர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் தூதுவர் முன்னிலையிலேயே சந்தித்துப் பேசியிருந்தனர்.

அதன் பின்னர் பேராசிரியர் பீரிஸ் வெளியுறவு அமைச்சராகவும் பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்றனர்.

இந்தவொரு பின்னணியிலேயே சுமந்திரன் குழுவினர் அமெரிக்கா சென்று பேச்சு நடத்தியுமிருந்தனர்.

ஆகவே சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அமெரிக்கா வெளியிட்டிருக்கும் அறிக்கையில், அதுவும் குறிப்பாக சவேந்திர சில்வா போல அன்றி இலங்கையின் உள்ளகச் சட்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கீழ்நிலை இராணுவ அதிகாரிகள் இருவருக்குத் தடை விதிக்கப்பட்டமையும், அமெரிக்காவின் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பைச் சேர்ந்த பிரதான கட்சிகளின் வெளியுறவு சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இருவர் பிரிக்கப்படாத இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசியதற்கும் தொடர்பு இருப்பதாக அமெரிக்க- இலங்கைச் செயற்பாட்டை அவதானிப்போர் கூர்மைக்கு எடுத்தியம்பினர்.

அமெரிக்காவுடன் முரண்படுவது போல காண்பித்துக் கொண்டு சீனாவின் கடும் பிடிக்குள் இருந்து மீள்வதற்கான உத்தியை இலங்கை கையாண்டு வருகின்றது என்பதையும் உன்னிப்பாக அவதானிப்போரால் கூற முடியும்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக அமைச்சரவை அந்தஸ்தோடு பதவி வகிக்கும் முன்னாள் அமைச்சர் மிலிந்தமொறகொட, வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் திட்டம் அரங்கேறி வருகின்றது.

அதாவது ஜெனீவா மற்றும் சர்வதேச அரங்கில் இருந்து ஈழத்தமிழர் விவகாரம் முற்றாக நீக்கம் செய்யப்பட வேண்டுமென்பதே இவர்களின் திட்டம்.

இவர்களில் மிலிந்த மொறகொட, பேராசிரியர் பீரிஸ் ஆகிய இருவரும் சமாதானப் பேச்சுக் காலத்தில் அமைச்சர்களாகப் பதவி வகித்திருந்தவர்கள்.

ஆகவே போரின் பின்னரான அரசின் உள்ளகப் பொறிமுறை என்ற விருப்பத்தை அரங்கேற்ற அமெரிக்காவும் இறுக்கிப் பிடிக்கிறது என்பதே நிதர்சனம்.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதன் மூலம், தனது புவிசார் அரசியல் நோக்கங்களையும் அமெரிக்கா அடைய முற்படுகின்றது.

கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ஸ்ரெப்லிஸ் மாற்றலாகிச் சென்றுள்ள நிலையில், அமெரிக்கத் தூதகரத்தின் இரண்டாம் நிலை அதிகாரியான மாட்டீன் கெலி இலங்கை விவகாரத்தைக் கையாண்டு வருகின்றார்.

அதேவேளை ஒரு சில கிழமைகளுக்கு முன்னர் திருகோணமலைக்குச் சென்றிருந்த ஜேர்மன் நாட்டுத் தூதுவர் அத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவத்தைப் பற்றி கீச்சகத்தில் அனைவரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கோடு பதிவிடிருந்தமையும் இங்கு ஒரு சேரக் கோர்த்து நோக்கப்படவேண்டும். ■

ஈழநாடு

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL


29. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண்பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும், பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 12 (3) 32

30. பணம் எடுக்கும் இயந்திரம் ஒன்றில் முதல் தடவை பணம் எடுக்கும் போது நாம் நினைத்த பணத்தின் இரண்டு மடங்கைத் தரும். இரண்டாம் தடவை எடுக்கும் போது முதல் தடவை எடுத்த பணத்தின் நான்கு மடங்கு கிடைக்கும். இரண்டாம் தடவை எடுத்த பணம் ரூபாய் 1200.00 எனின் முதலில் எடுக்க நினைத்த பணம் யாது?

(1) ரூபாய் 200.00 (2) ரூபாய் 170.00 (3) ரூபாய் 150.00

31. அருகே உள்ள வடிவங்களை மட்டும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சதுரம் எது?




(1) (2) (3)

32. ஓர் ஓட்டப் பந்தயப் போட்டியில் இரண்டாவதாக ஓடிச் செல்லும் ஒருவரை பின்னுக்குத் தள்ளி முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்கள். எனின் இப்போது உங்களுடைய நிலை என்ன?

(1) முதலாம் நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை

33. ஆறு இடங்கள் தொடர்புபடும் பாதையின் வரைபடம் தரப்பட்டுள்ளது. அம்புக்குறியால் காட்டப்படுவது பயணம் செய்யக் கூடிய திசைகள் ஆகும்.




ஒருவர் பேருந்து நிலையத்திலிருந்து அலுவலகம் வரை செல்வதற்கு ஒன்றுக்கொன்று வேறுபட்ட எத்தனை பாதைகள் உள்ளன?


(1) 7 (2) 8 (3) 9

34. ஒவ்வொரு பூவிலும் ஒரு வண்ணத்துப்பூச்சி இருந்தால் ஒரு வண்ணத்துப்பூச்சிக்கு பூ கிடைக்க மாட்டாது. அதே நேரம் ஒரு பூவில் இரண்டு வண்ணத்துப்பூச்சிகள் இருந்தால் ஒரு பூ எஞ்சியிருக்கும் எனின் அங்குள்ள பூக்களினதும் பூச்சிகளினதும் எண்ணிக்கை யாது?

(1) பூக்கள் - 6 வண்ணத்துப்பூச்சிகள் - 8

(2) பூக்கள் - 5 வண்ணத்துப்பூச்சிகள் - 10


(3) பூக்கள் - 3 வண்ணத்துப்பூச்சிகள் - 4

35. 

தரப்பட்ட உருவில் இனங்காணக் கூடிய முக்கோணிகளினதும் செவ்வகங்களினதும் எண்ணிக்கைகள் முறையே



(1) 8, 5 (2) 10, 3 (3) 8, 3

36. சம அளவிலான ஆறு பக்கங்களைக் கொண்ட வடிவமொன்று மூன்று தடவைகள் மடிக்கப்பட்டு துளைகள் இடப்பட்ட வடிவம் முன்னே தரப்பட்டுள்ளது. அதனை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?



(1) (2) (3)

### விடைகள்

| | | |
|---|---|---|
| 29. | (2) | 12 |
| 30. | (3) | ரூபாய் 150.00 |
| 31. | (3) |  |
| 32. | (2) | இரண்டாம் நிலை |
| 33. | (2) | 8 |
| 33. | (2) | 8 |
| 34. | (3) | பூக்கள் - 3 வண்ணத்துப்பூச்சிகள் - 4 |
| 35. | (3) | 8, 3 |
| 36. | (1) |  |

# கொரோனா சுனாமி உருவாகும் அபாயம்!

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.14

**பண்டிகைக் காலங்களை கழிப்பதற்கு எண்ணியுள்ளோர் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியைச் செலுத்தாமல் செயல்பட்டால் வருட இறுதியில் நாட்டில் கொரோனா சுனாமியொன்றே ஏற்படலாம் என மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

”எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் மக்கள் பல்வேறு பயணங்களை மேற்கொள்வதற்கு முடிவெடுத்திருப்பார்கள். அவ்வாறான பயணங்களை மேற்கொள்வதற்கு முன்பதாக கொரோனா மூன்றாவது தடுப்பூசியைக் கண்டிப்பாக பெற்றுக்கொள்வது சிறந்தது.

மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாமல் மக்கள் கூடும் இடங்களுக்கு செல்லல், பயணங்களை மேற்கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகள் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் சூழ் நிலைக்கு வழிவகுக்கும் என்றும், அதற்கிணங்க வருட இறுதியில் நாட்டில் கொரோனா சுனாமியொன்று உருவாகக்கூடிய அபாய நிலையே ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் மீண்டும் புத்திசாலித்தனமாகச் செயற்படுகின்றனர். பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல் களியாட்டங்களை மேற்கொள்ள முயற்சித்தால் டிசம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் கொரோனா வைரஸ் பரவும் நிலை மேலும் மோச மடையும்” - என்றார். (இ)



# மதில் விழுந்து சிப்பாய் மரணம்!

பதுளை, டிசெ. 14

பதுளை, தியத்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவக் கல்லூரியில், பழைய மதிலொன்றை உடைப்பதற்கு முயற்சித்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மதில் விழுந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.



மடுல்சீமை பிரதேசத்தை சேர்ந்த 37 வயது இராணுவச் சிப்பாயே இவ்வாறு மரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பில் தியத்தலாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# நீர்கொழும்பில் விடுதி முற்றுகை: 2 பேர் கைது

நீர்கொழும்பு, டிசெ. 14

நீர்கொழும்பு பிரதேசத்தில் ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற போர்வையில் சட்ட விரோதமாக இயங்கிவந்த விபச்சார விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விபச்சார விடுதியை நடத்தி வந்த நபரும் விபச்சார விடுதியை நடத்துவதற்கு உடந்தையாக இருந்த பெண்ணுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான 23 வயது பெண், கண்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தனிமைப்படுத்தல் விதிமுறையை மீறிய 1,908 பேருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 14



மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,908 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரைக் கண்காணிக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், 821 பொலிஸார் இணைந்து நேற்றுமுன்தினம் விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 2 ஆயிரத்து 961 மோட்டார் சைக்கிள்களும், 2 ஆயிரத்து 721 ஓட்டோக்களுக்கும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 8 ஆயிரத்து 138 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,908 பேர் எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# உயர்கல்வியில் இராணுவத்தை உள்வாங்கப் போகின்றார்களா?

## வேலுகுமார் எம். பி. கேள்வி

கொழும்பு, டிசெ. 14

உயர்கல்வியில் இராணுவத்தினரை புகுத்தப் போகின்றார்களாக என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உயர்கல்வியில் மாற்றத்தைக் கொண்டு வரவுள்ளார் என்று தெரிவித்துள்ளார். உயர்கல்வியில் இராணுவத்தை உள்வாங்கப் போகின்றார்களா?



இலங்கையின் கல்வித் துறையிலும் இராணுவத்தினரின் ஆதிக்கம் ஏற்படப்போகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அரச நிர்வாகத்துறையில் இராணுவம், சுகாதாரத்துறையில் இராணுவம், விவசாயத்துறையில் இராணுவம் உயர்கல்வித் துறையிலும் இராணுவமா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.

ஜனநாயக ரீதியில் கட்டமைக்கப்பட்ட ஒரு நாட்டுக்கு இது சிறந்த முன்னுதாரணம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவ மோகம் கொண்டவர், இராணுவத்துக்கு முன்னுரிமை அளிப்பவர் என்பது படிப்படியாக வெளிப்படுகின்றது.

அரச நிர்வாகத்துறையில் இராணுவத்துக்குத்தான் இன்று முன்னுரிமை. சுகாதாரத்துறையில் இராணுவத்துக்குத்தான் முன்னுரிமை. விவசாயத்துறையிலும்கூட இராணுவத்துக்கு முன்னுரிமை அளிக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று இன்று சுகாதாரத்துறைக்குப் பாரிய சவால். எனவே, இந்தச் சவாலை எதிர்கொள்ள கொரோனா தடுப்புச் செயலணியை அமைத்து இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கே செயலணியின் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டது.

இந்தச் செயலணியின் பிழையான முடிவுகள், காலதாமதத்தால் தடுப்பூசி கொண்டுவருவதில் இழுபறி நிலை காணப்பட்டது.

இதனால் 14 ஆயிரத்துக்கும்க்கும் அதிகமான இலங்கையர்கள் உயிரிழந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில், இன்று விசாயத்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவே பாரிய பிரச்னையாகக் காணப்படுகின்றது.

அரசு உர இறக்குமதியை ஒரு இரவில் தடைசெய்தமையே இதற்குக் காரணம்.

விவசாயத்துறையில் இருக்கின்ற உரப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையையும் இராணுவத்திடம் கையளித்துள்ளனர்.

உர இறக்குமதியில் பாரிய குளறுபடிகள் இருக்கின்றன. அத்துடன் உர இறக்குமதியில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன” - என்றார். (இ)

# தொழிலதிபரின் ஏ.ரி.எம். அட்டையைப் பயன்படுத்தி மோசடி செய்த பிச்சைக்காரப் பெண் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 14

தொழிலதிபர் ஒருவரின் ஏ.ரி.எம். அட்டையைப் பயன்படுத்தி மோசடி செய்த பிச்சைக்காரப் பெண் ஒருவரை மொறட்டுவைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

எகொட உயன பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவர் தனது ஏ.டி.எம். அட்டை தவறிவிட்டது எனவும், அதில் இருந்து சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயை ஒருவர் மோசடி செய்துள்ளார் எனவும் அளித்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் களுத்துறை வடக்கு, விலேகொட பிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடைய பெண் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

மொறட்டுவை பிரதேசத்தில் உள்ள பல்பொருள் அங்காடிக்கு அருகில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த இவர் ஏ.ரி.எம். அட்டை தரையில் விழுந்து கிடந்த நிலையில் எடுக்கப்பட்டது எனத் தகவல் அளித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.



இதன் மூலம் சுமார் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சலவை இயந்திரம், அரிசி குக்கர், ஆயத்த ஆடைகள், மதுபானம் மற்றும் உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிச்சை எடுத்தாலும் சந்தேக நபர், வாடகைக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு வீடுகளின் உரிமையாளர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் மொறட்டுவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (இ)

# தென்னாபிரிக்க அதிபருக்கு கொரோனா தொற்று உறுதி



கேப்டவுண், டிசெ. 14

தென்னாபிரிக்கா ஜனாதிபதி சிறில் ரமபோசா கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஜனாதிபதிக்கு லேசான அறிகுறிகளே காணப்படுகின்றன. தென்னாபிரிக்க இராணுவ மருத்துவப் பிரிவினர் அவரது உடல் நிலையைக் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதிக்கான அனைத்துப் பொறுப்புகளையும் துணை ஜனாதிபதி டேவிட் மபுஜா கவனித்துக் கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

69 வயதான தென்னாபிரிக்கா ஜனாதிபதி சிறில் ரமபோசா இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுள்ளார்.

அண்மையில் அவர் மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்திருந்தார். அப்போது ஜனாதிபதி மற்றும் அவருடன் சென்றிருந்த அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 8 ஆம் திகதி இக்குழுவினர் ஜொகன்னஸ் பேர்க் திரும்பினர். இதனையடுத்து இக்குழுவினருக்கு மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதிலும் ஜனாதிபதி உள்ளிட்ட அனைவருக்கும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையிலேயே நேற்று முன் தினம் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஜனாதிபதி சிறில் ரமபோசா கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது. (அ)



# பிரிட்டனில் கோவிட் எச்சரிக்கை நான்காம் நிலைக்கு உயர்ந்தது!

லண்டன், டிசெ. 14

பிரிட்டனில் ஒமைக்ரோன் புதிய திரிபு தொற்று நோயாளர் தொகை அதிகரித்து வரும் நிலையில் அங்கு கொவிட் அபாய எச்சரிக்கை 3 இல் இருந்து நான்காம் நிலைக்கு உயர்த்தப்பட்டது. நாட்டின் நான்கு தலைமை மருத்துவ அதிகாரிகள் அமைச்சர்களுக்கு செய்த பரிந்துரையை ஏற்று எச்சரிக்கை 4ஆம் நிலைக்கு உயர்த்தப்பட்டது.

ஒமைக்ரோன் தொற்று பரவலை அடுத்து இங்கிலாந்து முழுவதும் தொற்று நோயாளர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நோயாளிகளின் எண்ணிக்கை இன்னும் வேகமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, பூஸ்டர் தடுப்பூசிகள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து ஒமைக்ரோன் உள்ளிட்ட அனைத்து வைரஸ்களுக்கும் எதிரான செயல்திறனை வெளிப்படுத்துவதால் தகுதியுடைய அனைவரும் 3 ஆவது பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

இங்கிலாந்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 1,239 பேருக்கு புதியதாக ஒமைக்ரோன் திரிபு தொற்று உறுதி செய்யப்பட்டது. இது நாட்டில் நாளொன்றில் பதிவான அதிகபட்ச ஒமைக்ரோன் தொற்று நோயாளர் தொகையாகும். அத்துடன், சனிக்கிழமை உறுதி செய்யப்பட்ட ஒமைக்ரோன் தொற்றாளர் தொகையை விட இரு மடங்கு அதிகரிப்பாகவும் இது அமைந்துள்ளது.

இவற்றுடன் இங்கிலாந்தில் ஒமைக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் மொத்த எண்ணிக்கை 3,137 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தொற்று பரவல் வீதம் அதிகரித்து மருத்துவமனைகள் மீண்டும் அழுத்தங்களை எதிர்கொண்டு வருவதை அடுத்தே கோவிட் அபாய எச்சரிக்கை 3 இல் இருந்து நான்காம் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

# சுயநிர்ணயத்துக்கு எதிராக கலிடோனியா வாக்களிப்பு!

## கடலாதிக்கப் போட்டியில் கேந்திர மையமாக மாறும் பசுபிக் தீவுகள்



பாரிஸ், டிசெ. 14

"நீங்கள் நியூ கலிடோனியாவின் இறையாண்மையை ஏற்றுக்கொண்டு பிரிந்து சென்று சுதந்திரதேசமாக வாழ விரும்புகிறீர்களா?"

பிரான்ஸின் கடல் கடந்த நிர்வாகப் பிராந்தியங்களில் ஒன்றான நியூகலிடோனியா தீவின் மக்கள் இந்தக் கேள்விக்கு 'இல்லை' என்று பதிலளித்திருக்கிறார்கள். மூன்றாவது முறையாக இந்தக் கேள்வியை நிராகரித்துள்ள அவர்கள் பிரான்ஸின் கீழ் இணைந்து வாழும் விருப்பத்தை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். ஆனால், சுயாட்சி கோரும் பழங்குடி மக்கள் சார்ந்த சுதந்திர இயக்கத்தினர் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரித்திருந்தனர். கொரோனா வைரஸ்தொற்று நோயால் பிரசார நடவடிக்கைகளைப் பரந்த அளவில் முன்னெடுக்க முடியாத நிலை இருப்பதைக் காரணங்காட்டித் தேர்தலை அடுத்த ஆண்டு செப்ரெம்பர் வரை ஒத்திவைக்குமாறு அவர்கள் கோரியிருந்தனர்.

பழங்குடி இனத்தவர் வாழ்கின்ற பகுதிகளில் நேற்றைய வாக்களிப்பு மிக மந்தமாக இருந்தது என்பதை சுயாதீன ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த வாக்களிப்பில் அரைவாசிக்கும் குறைவாக 43.90 வீத வாக்குகளே பதிவாகி உள்ளன. அவற்றில் பிரிவினைக்கு எதிராக 96.49 வீதமானோரும் ஆதரவாக 3.51 வீதமானோரும் வாக்களித்திருக்கின்றனர். ஏற்கனவே 2018, 2020 களில் நடத்தப்பட்ட வாக்கெடுப்புகளிலும் பிரிவினையை எதிர்க்கின்ற தரப்பினரே வெற்றி பெற்றிருந்தனர்.

சுயநிர்ணய வாக்களிப்பின் முடிவுகள் குறித்து மகிழ்ச்சி வெளியிட்டிருக்கின்ற அதிபர் மக்ரோன், "பிரான்ஸ் இன்றிரவு மேலும் அழகுடன் மிளிர்கிறது. அது நியூ கலிடோனியாவையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் " என்று கூறியிருக்கிறார்.

அதிபர் தேர்தலை எதிர்கொள்கின்ற பின்னணியில் கலிடோனியா மக்களது தீர்ப்பு மக்ரோனுக்கு ஆறுதலான ஒரு செய்தியாக வந்திருக்கிறது.

சுமார் ஒரு லட்சத்து 85 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட நியூ கலிடோனியா தீவுக்கூட்டம் ♦ ரேலியாவுக்குக் கிழக்கே இரண்டாயிரம் கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்திருக்கிறது.

அங்குள்ள 'கனாக்' (Kanak) என்கின்ற பழங்குடி இனத்தவர்களது கிளர்ச்சியை அடுத்து 1988 இல் செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையே பிரான்ஸின் காலனித் துவத்தை முடிவுக்குக் கொண்டு வந்து கலிடோனியாவுக்குச் சுயாட்சி வழங்குவதைத் தீர்மானிப்பதற்கான மூன்று கட்ட சுயநிர்ணய வாக்கெடுப்புகளை நடத்த வழி செய்தது. அதன்படிநேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்தது மூன்றாவது இறுதி வாக்கெடுப்பு ஆகும். பழங்குடி மக்களின் பகிஷ்கரிப்புக்கு மத்தியில் நடைபெற்று முடிந்துள்ள இந்த தேர்தலை சுதந்திரத்துக்கு ஆதரவான இயக்கம்'போர்ப்பிரகடனம்' என்று கூறி நிராகரித்திருக்கிறது.

தேர்தலை ரத்துச் செய்யுமாறு ஐ. நா. சபையிடம் கோரவுள்ளதாக அது தெரிவித்திருக்கிறது.

பிரான்ஸின் 13 கடல் கடந்த தீவுகளில் வறுமை, தொழில் வாய்ப்பின்மை போன்ற பல காரணங்களால் அமைதியின்மை நிலவுகின்றது. தாங்கள் கவனிப்பின்றிக் கைவிடப்பட்டதான உணர்வு அங்கு வசிப்போர் மத்தியில் மேலெழுந்துள்ளது.

நியூ கலிடோனியாவின் இன்றைய வாக்களிப்பு அங்கு 1980 களில் உருவான வன்முறைகள் போன்ற பதற்ற நிலைமையை உருவாக்கி விடலாம் என்று சிலர் அஞ்சுகின்றனர். தீவின் பாரம்பரிய வழித் தோன்றல்களான 'கனாக்' இனத்தவருக்கும் அங்கு வசிக்கின்ற பிரெஞ்சு வெள்ளை இனத்தவருக்கும் இடையிலான வேறுபாடுகளே அங்கு கிளர்ச்சிக்கு வழிவகுத்தது.

**நியூ கலிடோனியாவில் சீனா காலூன்றுமா?**

பிரான்ஸின் மிகப் பெரிய கடல்கடந்த பிராந்தியங்களில் ஒன்றாகிய அழகிய நியூ கலிடோனியாத் தீவுக் கூட்டங்கள் அவற்றின் நிக்கல் (nickel) உலோக வளம் காரணமாக உலக சக்திகளால் குறிவைக்கப்பட்டுள்ளன. உலகின் மொத்த நிக்கல் தாது வளத்தில் பத்து வீதமானவை தீவுக் கூட்டங்களில் செறிந்துள்ளன.

கைபேசிகள், பற்றரிகள், துருப்பிடிக்காத இரும்பு போன்றவற்றைத் தயாரிப்பதற்கு நிக்கல் பிரதான பொருளாகப் பயன்படுகிறது.

அதேசமயம் பிரான்ஸின் பசுபிக் கடல் ஆதிக்க உரிமை கோரலுக்கான முக்கிய பிடிகளில் ஒன்றாக இத் தீவுக் கூட்டங்கள் உள்ளன. பசுபிக் கடலில் பிரான்ஸின் உரிமைகள் மற்றும் இராணுவப் பிரசன்னத்துக்கான நியாயாதிக்கத்தை நியூ கலிடோனியாவே வழங்குகிறது. கலிடோனியா சுதந்திர தேசமாக மாறுவது சீனா அங்கு ஆழக் கால் பதிப்பதற்கு வழிவகுத்துவிடும் என்று மேற்குலக நிபுணர்கள் அச்சம் கொண்டுள்ளனர். (அ)

# பிரபஞ்ச அழகி பட்டம் வென்றார் இந்தியாவின் ஹர்னாஸ் சாந்து!

ஜெருசலேம், டிசெ. 14

பிரபஞ்ச அழகி பட்டத்தை (Miss Universe 2021) இந்திய அழகி ஹர்னாஸ் சாந்து வென்றுள்ளார். 21 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய அழகிக்கு இம்முறை இப்பட்டம் கிடைத் துள்ளது.

கடைசியாக கடந்த 2000 ஆம் ஆண்டு லாரா தத்தா, பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றிருந்தார். இந்நிலையில் 21 ஆண்டுகள் கழித்து 21 வயது இளம் பெண்ணான ஹர்னாஸ் சாந்து பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றுள்ளார்.

இஸ்ரேலின் எய்லாட் நகரில் நடந்த போட்டியில் அவருக்கு



இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஹர்னாஸ் சாந்து இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் மிஸ் இந்தியா யுனிவர்ஸ் பட்டம் வென்றிருந்தார்.

1994 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் நடந்த பிரபஞ்ச அழகி போட்டியில் சுஷ்மிதா சென் முதன்முறையாக பிரபஞ்ச அழகி பட்டம் வென்ற இந்திய அழகி என்ற பெருமையைப் பெற்றார். அதன் பின்னர் கடந்த 2000 ஆம் ஆண்டு லாரா தத்தா அந்தப் பட்டத்தை வென்றார். இப்போது 21 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவின் ஹர்னாஸ் சாந்து பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றுள்ளார். (அ)

# போர்முலா வன் பந்தயம்; வெர்ஸ்டாபென் சம்பியன்

அபுதாபி, டிசெ. 14

அபுதாபி கிராண்ட் ப்ரீ போர்முலா வன் கார் பந்தயத்தில் நெதர்லாந்து வீரர் மக்ஸ் வெர்ஸ்டாபென் சம்பியனானார். இது அவர்வெல்லும் முதல் உலக சம்பியன் பட்டமாகும்.

பந்தயத்தின் கடைசி லாப் வரை இங்கிலாந்து வீரரான லூயிஸ் ஹமில்டன் முன்னிலையில் இருக்க, இறுதி லாப்பில் அவரை பின்னுக்குத் தள்ளி த்ரில் வெற்றி கண்டார் 'றெட் புல்' வீரரான வெர்ஸ்டாபென்.

அபுதாபியில் உள்ள யாஸ் மரினா பந்தயத் திடலில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தொடக்கத்தில் இருந்தே ஹமில்டன் ஆதிக்கம் செலுத்தினார். கடைசி 5 லாப்கள் எஞ்சியிருந்த நிலையில், கனடா வீரர் நிகோலஸ் லடிபியின் கார் மோதலுக்கு உள்ளாகி சேதமடைந்ததால் பந்தயம் நிறுத்தப்பட்டது.



பந்தயப் பாதையில் இருந்து விபத்துக்குள்ளான கார் மற்றும் அதன் சிதறல்கள் நீக்கப்பட்ட பிறகு ஒரு கடைசி லாப் மட்டும் கொண்டதாக மீண்டும் பந்தயம் தொடங்கியது. இதில் ஹமில்டன் - வெர்ஸ்டாபென் இருவரும் இணையாகவே சிறிது தூரம் பறந்த நிலையில், சட்டென முன்னேறினார் ஹமில்டன். முதல் 4 திருப்பங்களில் பின்தங்கிய வெர்ஸ்டாபென், 5ஆவது திருப்பத்தில் அதிரடியாக ஹமில்டனை முந்திச் சென்றார். இறுதியாக பந்தய இலக்குக் கோட்டை அடையும்வரை அவர் பின்தங்கவில்லை.

2013 முதல் ஹமில்டனே மெர்சிடஸ் ஸ்பொன்சர் வீரரே போர்முலா வன் பட்டத்தை வென்று வந்த நிலையில் றெட் புல் ஸ்பொன்சர் முதன் முதலாக சம்பி யனானமை இதுவே முதல்முறையா கும். நடப்பு ஆண்டின் இறுதிப் போட்டியில் வெர்ஸ்டாபென் சம்பியன் வென்றதன் மூலம் போர் முலாவன் பட்டம் வென்ற முதல் நெதர்லாந்து வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.



ஆஷஷ் டெஸ்ட் தொடர்

## ஆஸி. அணியிலிருந்து ஹசில்வூட் விலகினார்!

சிட்னி, டிசெ. 13

ஆஷஷ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியிலிருந்து அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹசில்வூட் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 ஆட்டங்களைக் கொண்ட ஆஷஷ் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இரு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தத் தொடர் இம்முறை, அவுஸ்திரேலியாவில் நடக்கிறது.

பிரிஸ்பேனில் நடந்த முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை அடிலெய்டில் ஆரம்பமாகிறது. பகல் - இரவு போட்டியாக நடக்கும் இந்தப் போட்டியிலிருந்து ஹசில்வூட் காயம் காரணமாக வெளியேறியுள்ளார்.

பகல் - இரவு போட்டியின் சிறந்த பந்துவீச்சாளரான ஹசில்வூட் அணியில் இல்லாதது அவுஸ்திரேலியாவுக்கு பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது. ஹசில்வூட்டுக்கு பதிலாக றிச்சர்ட்சன் அணிக்கு அழைக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)



## ஐ. பி. எல். இருபது - 20 மெகா ஏலம் எப்போது?

புதுடில்லி, டிசெ. 14

2022ஆம் ஆண்டு நடக்கும் 15ஆவது ஐ. பி. எல். இருபது - 20 தொடரின் மெகா ஏலம் எப்போது நடக்கும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

15ஆவது ஐ. பி. எல். தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி தொடங்க உள்ளதாகத் தகவல் வெளியானது. இதில், புதிதாக இணைந்த லக்னோ, அகமதாபாத் அணிகளுடன் 10 அணிகள் பங்கேற்கவுள்ளன.

ஏற்கனவே, இருந்த 8 அணிகளும் தாங்கள் தக்கவைக்கும் வீரர்கள் பட்டியலை அறிவித்துவிட்டன. எனினும், புதிய இரு அணிகளும் தாங்கள் தக்கவைக்கும் அணியின் வீரர்கள் பட்டியலை வெளியிடவில்லை.

இந்நிலையில், மெகா ஏலம் இம்மாத இறுதியிலோ அல்லது ஜனவரி முதல் வாரத்திலோ மும்பை அல்லது சென்னை நகரங்களில் ஒன்றில் நடக்கலாம் என்று பிரபல விளையாட்டு ஆங்கில இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ)

எல். பி. எல். இருபது - 20 தொடர்:

## இரண்டாவது வெற்றியை பதிந்தது கொழும்பு அணி!

கொழும்பு, டிசெ. 14

மீண்டும் அணியுடன் இணைந்த அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் சந்திமாலின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க கொழும்பு ஸ்ரார்ஸ் அணி தொடரில் தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

எல். பி. எல். இருபது - 20 இன் இரண்டாவது தொடர் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடக்கிறது. இதில் நேற்று நடந்த ஆட்டத்தில் கொழும்பு ஸ்ரார்ஸ் அணி காலி கிளாடியேற்றர்ஸ் அணியை எதிர்கொண்டது.

நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான கொழும்பு அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மழை காரணமாக போட்டி 18 ஓவர்களாக மட்டுப்படுத்தப் பட்டிருந்தது.

காயம் காரணமாக முதல் 4 போட்டிகளில் விளையாடாத மத்தியூஸ் இந்தப் போட்டியுடன் மீண்டும் கொழும்பு ஸ்ரார்ஸ் அணியின் தலைமையை பொறுப் பேற்றிருந்தார்.

தொடக்கம் கொடுத்த பதும் நிசங்க ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க மறுமுனையில் நின்ற மத்தியூஸுடன் இணைந்தார் அசான் பிரியாஞ்சன். இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப் படுத்தினர். பவர் பிளே வரை - 5 ஓவர்களில் 25 ஓட்டங்களையே கொழும்பு அணி பெற்றிருந்தது.

பிரியாஞ்சன் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க,



அடுத்து வந்த ரொம் பான்ரன் 5, சீக்குகே பிரசன்ன 6 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். அடுத்து வந்த சந்திமால் அதிரடி காட்டினார். இதனிடையே 57 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை விளாசிய மத்தியூஸ் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தினேஷ் சந்திமால் 14 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 36 ஓட்டங்களைக் குவித்து வெளியேறவே 18 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு கொழும்பு அணி 162 ஓட்டங்களைப் பெற்றது.

காலியின் பந்துவீச்சில் சமித் பட்டேல், தனஞ்சய லக்ஷான ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

18 ஓவர்களில் 163 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய காலி கிளாடியேற்றர்ஸ் அணிக்கு குசல் மெண்டிஸ் மட்டுமே அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். ஏனைய வீரர்கள் சோபிக்காத நிலையில் 16.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 121 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் கொழும்பு ஸ்ரார்ஸ் அணி 41 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

குசல் மெண்டிஸ் 39 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 64 ஓட்டங்களை சேர்த்திருந்தார்.

கொழும்பு அணியின் பந்துவீச்சில் நவீன் உல் ஹக் 3 விக்கெட்களையும், ரவி ராம்போல், சீக்குகே பிரசன்ன ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக தினேஷ் சந்திமால் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)





## சங்கானையில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
சங்கானை பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

ஒவ்வொரு வருட இறுதியிலும், சங்கானை பிரதேச செயலகமும், சங்கானை பிரதேச செயலக நலன்புரிச் சங்கமும் இணைந்து இரத்ததான முகாம் நடாத்தி வருகின்றது.

அந்தவகையில், நேற்று சங்கானை பிரதேச செயலகத்தின் மண்டபத்தில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் குருதி வழங்கி இந்த இரத்ததான முகாமுக்குப் பங்களிப்புச் செய்தனர்.(இ - 03)

## கொரோனா தொற்றிலிருந்து மேலும் 382 பேர் குணமடைவு

கொழும்பு, டிசெ. 14
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 382 பேர் குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் விஞ்ஞானப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 45 ஆயிரத்து 433 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# பரிகார பூஜை செய்ய சென்ற வீட்டில் நகைகள் கொள்ளை!

## பெண் பூசாரியும் ஆண் நண்பரும் கைது

மட்டக்களப்பு, டிசெ. 14
தாலிக்கொடி , தங்கசங்கிலி உட்பட சுமார் 10 இலட்சம் பவுண் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கைதான பெண் பூசாரியும், அவரது ஆண் நண்பரும் 14 நாட்கள் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள தாழங்குடா பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை பல வருடமாக குழந்தை இல்லாத தம்பதியினர் தமது வீட்டைக் காவல் செய்வதற்கான சடங்கு (பரிகார) பூஜை ஒன்றை செய்வதற்காக கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் பூசாரியான சந்தேகநபரை வரவழைத்துள்ளனர்.

அவ்வாறு வரவழைக்கப்பட்ட குறித்த பெண் பூசாரி அந்த வீட்டில் அன்றிரவு தங்கி பூஜை நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் மறுநாள் அதிகாலை அங்கிருந்து சென்றுள்ளார்.

இந்தநிலையில், பூஜை நிறைவடைந்த பின்னர் வீட்டின் அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 6 பவுண் நிறை கொண்ட தாலிக்கொடி, ஒரு பவுண் நிறை கொண்ட தங்கச் சங்கிலி, கால் பவுண் மோதிரம் என்பவை காணாமல்போனதை அறிந்த வீட்டு உரிமையாளர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.



இந்த முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணையை மேற்கொண்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 31 வயதுடைய பெண் பூசாரியையும், 20 வயதான அவரது ஆண் நண்பரையும் கைது செய்தனர்.

பின்னர் அவரிடம் முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் விசாரணையின்போது களவாடப்பட்ட தங்க ஆபரணங்கள் தனியார் அடகு நிறுவனம் ஒன்றில் ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய நகைகள் தங்க நகைக் கடைகளில் விற்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதேவேளை, இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் கைதாகிய பெண் பூசாரியான சந்தேகநபர் கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையங்களில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதுடன் வழக்குகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதான பெண் பூசாரியையும், அவரது ஆண் நண்பரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்திய நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த பெண்ணால் பாதிக்கப்பட்டவர்கள் யாராவது இருப்பின் பொலிஸ் நிலையத்தைத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (இ)

# மன்னார் கடலில் மூழ்கி காணாமல்போன இரு மீனவர்களில் ஒருவர் சடலமாக மீட்பு

மன்னார், டிசெ. 14
மன்னார், கோந்தைப்பிட்டிக் கடலில் மூழ்கி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் நேற்றுமுன்தினம் மதியம் காணாமல்போன நிலையில் நேற்றுக் காலை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்., பருத்தித்துறையைச் சேர்ந்த தர்ஷன் (வயது - 19) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது - 28) என்கின்ற இரண்டு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் காணாமல்போயுள்ளார். அவரைத் தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மூன்று மீனவர்கள் கோந்தைப்பிட்டி கடலில் தமது படகைச் செலுத்தி தொழிலுக்குச் செல்ல சரி பார்த்துள்ளனர். இதன்போது மூன்று மீனவர்கள் உள்ளடங்கலாக 8 பேர் படகில் இருந்துள்ளனர்.

அவர்கள் படகில் வெளி இணைப்பு இயந்திரத்தை இணைத்துப் படகைச் செலுத்தி பார்த்துள்ளனர்.



படகின் வெளி இணைப்பு இயந்திரம் திடீரென இயங்காத நிலையில் காணப்பட்டுள்ளது.

காற்றின் காரணமாக படகு கடலில் சென்று கொண்டிருந்தது. இதன்போது படகின் முன் அணியத்தில் நின்ற ஒருவர் திடீரென கடலில் வீழ்ந்து கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மற்றைய மீனவர் அவரைக் காப்பாற்ற கடலில் குதித்துள்ளார்.

எனினும், குறித்த மீனவரும் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்டார். ஏனையவர்கள் போராடியும் குறித்த இருவரையும் மீட்க முடியவில்லை.

நீண்ட நேரத்தின் பின்னர் குறித்த படகின் வெளி இணைப்பு இயந்திரம் இயங்கிய நிலையில் இவர்கள் கரை திரும்பி ஏனைய மீனவர்களின் உதவியுடன் காணாமல்போன இருவரையும் தேடியுள்ளனர்.

எனினும், நேற்றுமுன்தினம் இரவு வரை மீனவர்கள் மீட்கப்படவில்லை. நேற்றுக் காலை முதல் மீனவர்கள் கடலில் மீண்டும் தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது கோந்தைப்பிட்டிக் கடலில் இருந்து சற்றுத் தொலைவில் தர்ஷன் (வயது - 19) என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மற்றைய மீனவரை மீனவர்கள் தேடி வருகின்றனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



## யாழ்ப்பாணம் இளைஞர்களுக்கு உயிர்காப்பு பயிற்சிப் பாடநெறி

யாழ்ப்பாணம், டிசெ. 14
இலங்கைக் கடற்படையினரால் யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்களுக்கு உயிர்காப்பு பயிற்சிப் பாடநெறி அண்மையில் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம், காரைநகரில் அமைந்துள்ள எலார கடற்படை முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 16 இளைஞர்கள் அடங்கிய குழுவொன்று கலந்து கொண்டது எனத் கடற்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படை சமூகப் பொறுப்புணர்வு முயற்சியின் ஒரு பகுதியாக, கடற்படையின் வடக்கு கடற்படைக் கட்டளையகம் 2021/01 மற்றும் 2021/02 ஆம் ஆண்டுக்கான லைஃப் வெண்கலப் பதக்கப் பயிற்சியை நடத்தியது.

மூன்று வார கால உயிர்காப்புப் பயிற்சியில் கலந்துகொண்டு பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் வடக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

கடற்படையின் விரைவு மீட்பு மற்றும் நிவாரணப் பிரிவின் உதவியுடன் இலங்கையின் உயிர்காப்பு மற்றும் நார்த்விண்ட் திட்டங்களுடன் இணைந்து கடற்படை இந்த உயிர்காப்புப் பாடத்திட்டத்தை ஏற்பாடு செய்தது.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் இந்த நிகழ்வு, சுகாதார வழிகாட்டுதலுக்கமைய இடம்பெற்றது என கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (இ - 03)

## ஜனாதிபதி...

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று கிளிநொச்சி வந்திருந்தது. இந்தக் குழு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடனான அமர்வு ஒன்றை நடத்தத் திட்டமிட்டது.

ஏற்கனவே, அமைக்கப்பட்ட ஆணைக் குழுக்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தால் எவ்வித தீர்வும் எட்டப்படாத நிலையில் இந்த ஆணைக்கழுவும் எமக்கு எந்தத் தீர்வையும் வழங்காது எனத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமர்வை புறக்கணித்தனர்.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டவலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி கோகிலவாணி தெரிவிக்கையில்,

“இன்றைய தினம் (நேற்று) மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவினர் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். நாங்கள் பதினொரு வருடமாக ஜனாதிபதி ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழுக்கள் உள்ளிட்டவற்றை சந்தித்து முறைப்பாடுகளை செய்துள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு ஐந்து பேரினது தகவல்களை ஒப்படைத்தோம். அந்த ஐந்து பேரின் தகவல்களைக்கூட பெற்றுத்தரவில்லை. அவர்களால் தரவும் முடியவில்லை.

நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) யாழ்ப்பாணத்திற்கு சென்ற ஜனாதிபதி ஆணைக்குழு மாவட்ட செயலகத்தில் தமக்கு சாதகமாக ஜெனிவாவில் விடயங்களை சமர்ப்பிப்பதற்காக தமக்கு ஏற்றவர்களை அழைத்து பொய்யான வாக்குமூலங்களை எடுத்துள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் (நேற்று)உள்ளே வந்து எமது எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு கேட்டிருந்தார்கள். அவ்வாறு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு நாங்கள் உள்ளே வரவில்லை எனவும், வெளியே இருந்தவாறே எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் கூறினோம்.

எத்தனையோ ஆணைக்குழுக்களிடம் பதிந்தும் எமக்கு தகவல் ஏதும் கிடைக்கவில்லை. அந்த வகையில் நாங்கள் உள்ளே செல்லவில்லை. இந்த ஜனாதிபதி ஆணைக் குழுவை எதிர்த்து வெளியில் நின்று போராடுகின்றோம் - என்றார். (ஐ)

## 3 பிள்ளைகளின்...

(வயது 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண்ணுக்கு 6 நாட்கள் காய்ச்சல் இருந்தது. தனியார் மருந்தகத்தில் மருந்துகளை பெற்ற அவர் நேற்று முன்தினம் மூச்சு திணறல் காரணமாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அந்தப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரின் சடலத்திலிருந்து பெறப்பட்ட மாதிரிகள் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டதாக அவரின் இறப்பு விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

## ‘பூஸ்டர் டோஸ்’...

வவுனியா - காத்தார் சின்னக்குளத்தை சேர்ந்த 54 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த நபர் மகாறம்பைக்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்தப்பட்ட பூஸ்டர் டோஸ் வழங்கும் முகாமில் தடுப்பூசியைப் பெற்றார்.

சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின்படி, தடுப்பூசி பெற்ற பின்னர் சிறிது நேரம் அங்கேயே காத்திருந்து விட்டு சைக்களில் தனது வீட்டுக்கு சென்றுள்ளார். வீட்டுக்கு சென்ற அவர் சில மணி நேரத்திலேயே மரணமானார்.

அவரின் உடலை உறவினர்கள் உடனடியாக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஏற்கனவே, அவர் சில நோய்களுக்கு உள்ளாகியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

அவரின் உடலை பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தவும், பிரேத பரிசோதனைகளை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## 4ஆவது டோஸ்ம்...

வைத்திருக்குமாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

“தற்போது வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி அட்டை எடுத்துச் செல்வதற்கு ஏற்றதல்ல. ஒரு தரவுத்தளத்தில் தகவல் சேர்க்கப்படும் வரை மற்றும் கியூ. ஆர். குறியீடு அமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை தடுப்பூசி அட்டையை பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் அலைபேசி ஊடாக இந்த முறைமையைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி, தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்வதை தவிர்க்கவேண்டும்” என்றும் அவர் கோரினார். (ஐ)

## 12 வயது...

16 வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான வழிகாட்டுதல்கள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. தடுப்பூசி எப்போது வழங்கப்படும் என்பது விரைவில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## 60 கர்ப்பவதிகள்,...

சில்வா இதனைத் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கர்ப்பவதி தாய்மார்களும் பூஸ்டர் டோஸ் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார். (ஐ)

## கொரோனா...

வர்களில் 30 வயதுக்குக் குறைவான ஆண் ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 641 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## ஒமைக்ரோன்...

என்று தெரிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமைக்ரோன் திரிபு 40 வரையான நாடுகளில் தற்போது பரவியுள்ளது. வேகமாகப் பரவும் இயல்பு கொண்ட இந்தத் தொற்று உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனத் தூதுவர்...

தின்போது, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உள்ளிட்ட முக்கியஸ்தர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

அத்துடன், கடற்றொழிலாளர்களுக்கான ஒருதொகுதி உபகரணங்களை வழங்கும் நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (ஐ)

# காணி அளவீடு எதிர்ப்பால் நிறுத்தம்!

மன்னார், டிசெ. 14

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தலைமன்னார் மேற்கு பகுதியில் நேற்று திங்கட்கிழமை வன வளத் திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கைகளுக்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

மன்னார் - தலைமன்னார் மேற்குப் பகுதியில் வனவளத் திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு வனவளத் திணைக் களத்தினர் காணிகளை அளவிடுவதற்காக சென்றிருந்தனர். இதன்போது அங்கு ஒன்று கூடிய குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இதைத்தொடர்ந்து வன வளத்திணைக் களத்தினருக்கும், தலைமன்னார் பங்குத் தந்தை அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகளுக் கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இதைத் தொடர்ந்து வன வளத்திணைக் களத்தினர் காணி அளவீட்டு பணிகளை கைவிட்டு அங்கிருந்து சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## தமிழ் மக்களின்...

குறித்தும் தெளிவு வேண்டும்”, என்று

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையின் அரசியல் யாப்பில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதுவே இப்போது அனைவராலும் பேசப்படும் 13ஆவது திருத்தமாகும். இதைத்தொடர்ந்து மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு மாகாணமாகவும் ஏனைய ஏழு மாகாணங்களை உள்ளடக்கி எட்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக டில்லியில் தமிழ் தரப்புகளுடனான பேச்சில் வடக்கு - கிழக்கு என்பது எப்போதும் இணைந்திருக்கும் என்ற உறுதிமொழியின் அடிப்படையிலேயே தமிழர் தரப்புகள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டன. பின்னர், பதின்மூன்றாவது திருத்தத்தைக் கொண்டுவந்தபோது இந்தியாவுடனோ தமிழர் தரப்புகளுடனோ சரியான பேச்சுகளை நடத்தாமல் ஜே. ஆர். ஜெயவர்த்தன தான் விரும்பியவாறு அரைகுறை அதிகாரப் பரவலாக்கலுடன் தமக்கு இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பயன்படுத்தி அந்தத் திருத்தத்தை பாராளுமன்றில் நிறைவேற்றினார்.

அப்போது வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பதின்மூன்றாவது திருத்தத்தில் இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்ற அடிப் படையில் ஓர் ஆவணத்தைத் தயார்செய்து அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அனுப்பிவைத்தனர்.

இதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கமும் பதின்மூன்றில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

ஆகவே, பதின்மூன்றாவது திருத்தம் என்பது முழுமையான அதிகாரப்பகிர்வு அல்ல என்பதை தமிழர் தரப்பு அன்றே ஏற்றுக்கொண்டது. ஆனால், அது ஒன்று மாத்திரம்தான் தமிழ் மக்களுக்குக் கிடைத்த சட்டபூர்வமான, அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரங்களாக இருக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்தும்படிதான் தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய பல கட்சிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

1950களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உருவாகிய பொழுது, தந்தை செல்வா தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வாக, சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தார். 1976ஆம் ஆண்டுவரையில், அவரின் சமஷ்டி கோரிக்கையில் எத்தகைய முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. தந்தை செல்வாவுக்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் அரச தரப்பால் கிழித்தெறியப்பட்டன. இதன் காரணமாக பிரித்தானியரிடம் தமிழர்கள் இழந்த இறையாண்மையை மீளப்பெறுவதற்கான தமிழர்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எத்தகைய பொறிமுறைகளோ, திட்டங்களோ, மூலோபாய, தந்திரோபாயங்களோ அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளும், அழிப்புகளும் தமிழ் இளைஞர்களை ஒரு தற்காப்பு நிலைக்குத் தூண்டியது. இதன் காரணமாக, பல்வேறுபட்ட ஆயுத அமைப்புகள் தோற்றம் பெற்று, தமிழின விடுதலைக்காக போராடின.

இந்த வரலாற்றைப் புரிந்துகொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விருப்பமில்லாதவர்கள், தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் என்று ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டும் புகழாரம் சூட்டிக்கொண்டும் தவறான கருத்துகளையும் அணுகுமுறைகளையும் தமிழ் மக்கள் மத்தியில் விதைக்க முயற்சிக்கின்றனர்.

“13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தும்படி சில கட்சித் தலைவர்கள் பேசுகின்றனர் எனவும், மஹிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தத்திற்கு மேலே சென்று இந்த பிரச்னையைத் தீர்ப்பேனென்று பலமுறை கூறினார் எனவும், ஆனால், அவற்றையெல்லாம் மறந்துபோன சில தமிழ்த் தலைமைகள் பதின்மூன்றை நிறைவேற்றும்படி இப்போது கோரிக்கைகளை முன்வைப்பது என்பது தமிழருக்குச் செய்யும் துரோகம்“ என்றும் இந்த சாணக்கியர்கள் 11.12.2021 அன்று சுன்னாகத்தில் நடந்த சாணக்கியர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில் கூறியுள்ளனர். இதே விடயத்தை இவர்கள் லண்டனிலும் தெரிவித்திருந்தனர். மாகாணசபைகளுக்கு அரசியல் சாசன ரீதியில் வழங்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதன் பிறகு, சமஷ்டியை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் அரசியல் தலைமைகளின் இன்றைய நிலை. ஆனால், அரசாங்கம் இதனையே நடைமுறைப்படுத்த முடியாதென பிடிவாதம் பிடிக்கிறது. இந்த நிலையில் இந்த சாணக்கியர்களும் 13ஐ ஏற்க மாட்டோம் என்று கூறுவது இவர்கள் யாருடைய நிகழ்ச்சிநிரலை நடைமுறைப் படுத்த முயற்சிக்கின்றனர் என்ற கேள்வியை எழுப்புகிறது - என்றுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி செயலர்...

தன உட்பட மேலும் சில அமைச்சர்களும், ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுமே இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கவுள்ளனர்.

இதன் பிரகாரம் ஜனாதிபதி செயலாளர் பதவியில் விரைவில் மாற்றம் வரவுள்ளதெனவும், புதிய ஜனாதிபதியின் செயலாளராக முன்னாள் அமைச்சரவைச் செயலாளரான அமரசேகர நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

அமரசேகர தற்போது தென்னாபிரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக செயல்பட்டு வருகின்றார். (அ)

ஈழநாடு
Eelanadu




# பிரியந்த குமார கொலை: இதுவரை 249 பேர் கைது!

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, டிச. 14

**பாகிஸ்தானில் வைத்து இலங்கையரான பிரியந்த குமார கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 249 பேர் அந்நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“பாகிஸ்தானிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு விசேட ஏற்பாடுகளின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான வழக்கு விசாரணை நாளாந்தம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது” - என்றார். (இ)

# இலங்கை - பங்களாதேஷ் பிரதமர்கள் பேச்சு

*கொழும்பு, டிச. 14*

*இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பங்களாதேஷ் பிரதமர் ஷைக் ஹசீனா ஆகியோருக்கு இடையே தொலைபேசி ஊடான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.*

*இரு தரப்பு உறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக இருவரும் கலந்துரையாடியதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ருவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.*

*இதேவேளை, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து முன்னெடுக்கக் கூடிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.*

*இலங்கையின் உண்மை மற்றும் நேர்மையான நண்பராக இருக்கும்*



*பங்காளாதேஷுடனான வரலாற்று நட்பை மதிப்பதாகத் தான் பங்களாதேஷ் பிரதமரிடம் கூறியதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ருவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.* (இ)

## அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்

# அம்புலன்ஸ்களிடம் இனிமேல் கட்டணம் அறவிடப்படமாட்டாது

*கொழும்பு, டிச. 14*

*அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் சகல அம்புலன்ஸ் வாகனங்களிடம் கட்டணம் அறவிடப்படமாட்டாது என ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.*

*அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணம் செய்யும் சகல அம்புலன்ஸ் வாகனங்களிடம் (அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளுடன் தொடர்புள்ள) அதிவேக நெடுஞ்சாலைகளில் கட்டணம் அறவிடாதிருக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.*

*இதற்கு முன்னர் நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் அம்புலன்ஸ் வாகனங்களிடம் கட்டணம் அறவிடப்பட்டது. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டு நிலைமையைக் கருத்தில்கொண்டு அதிவேக நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் சகல அம்புலன்ஸ்களிடம் கட்டணம் அறிவிடுவதை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.* (இ)

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 09 - 01 - 1967

**மறைவு** 10 - 12 - 2021

**திருமதி**

**புவிராஜசிங்கம் யோகசுகிர்தமலர் (சுகி)**

யாழ். கொடிகாமம் அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Epinay-sur-Seine ஐ வசிப்பிடமாகவும் கொண்ட புவிராஜசிங்கம் யோகசுகிர்தமலர் அவர்கள் 10.12.2021 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சிதம்பரநாதன் - லீலாவதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சடாச்சரம், - நவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புவிராஜசிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும், மர்திகா, கெவின், காலஞ்சென்ற ஸ்ரீபன், ஜெனிக், தர்மிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகரன்(பிரபா) அவர்களின் அன்பு மாமியாரும், பிரணவன்(Rana) அவர்களின் பாசமிகு அம்மம்மாவும், இந்திரன்(பிரான்ஸ்), சந்திரா(லண்டன்), ராசாத்தி (பிரான்ஸ்), சிறி(பிரான்ஸ்), ரவி(பிரான்ஸ்), சுதன் (பிரான்ஸ்), லதன்(பிரான்ஸ்), ரஞ்சன்(பிரான்ஸ்), கீதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நேசன் (ஜேர்மனி), தாசன்(இலங்கை), வசந்தி (இலங்கை), லதா(பிரான்ஸ்), பாமினி(பிரான்ஸ்), குகேந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**கெவின் (மகன்)**
+33659622357

*தகவல்:*
**குடும்பத்தினர்.**







*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
7.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - 3, அழகிய தமிழ் மகன் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு